Ours bank with
Bank of Baroda

# மதுரை மணி

தினசரி தமிழ் நாளிதழ்
Madurai Mani Tamil Evening Daily ®
ISO 9001:2015 / ISO 14001:2015: தரச்சான்றிதழ் பெற்ற நிறுவனம்

New College House
(A Heritage Hotel)
2342971 (3 Lines)
4372900 (4 Lines)
99526 02900
95669 84900
College House
Annameenakshi Restaurant (Veg.)
2, Town Hall Road,
Madurai-625 001.

மதுரை பதிப்பு *மணி 54 * ஓசை 44 உள்ளூர் - 13.02.2026 வெள்ளி விலை ரூ.3/- பக்கங்கள்-4 Website : http://maduraimaninews.com
Madurai Edition *Vol 54 * Issue 44 வெளியூர் - 14.02.2026 சனி Price Rs. 3/- Pages -4 Email: maduraimaninews@gmail.com

**சிவனின் ஆசிபெற்ற ராசிகள்?** | **த.நா. ஊரக இயக்கம்: 201 காலியிடங்கள்** | **வாகன ஓட்டிகளுக்கு மகிழ்ச்சி செய்தி...!** | **த.வெ.க. தலைவர் விஜய் அதிரடி பேச்சு!**

## பட்ஜெட் கூட்டத்தொடர் முதல் அமர்வு; கடும் அமளியால் லோக்சபா ஒத்திவைப்பு!



புதுடெல்லி, பிப். 13–

பட்ஜெட் கூட்டத்தொடரின் முதல் அமர்வு இன்றுடன் (பிப்ரவரி 13) நிறைவு அடைந்தது. லோக்சபா மார்ச் 9ம் தேதி காலை 11 மணி வரை ஒத்திவைக்கப்பட்டது.

பார்லிமென்டில் பட்ஜெட் கூட்டத்தொடர் நடந்து வருகிறது. முதல்நாளில் இருந்து எதிர்க்கட்சி எம்பிக்கள் கடும் அமளியில் ஈடுபட்டு வருவதால் அவை முடங்கி வருகிறது. பட்ஜெட் மீதான விவாதத்தில் நேற்று முன்தினம் பேசிய காங்கிரசைச் சேர்ந்த எதிர்க்கட்சித் தலைவர் ராகுல், பிரதமர் மோடியை கடுமையாக விமர்சித்தார். ராகுலை, எம்.பி., பதவியிலிருந்து நீக்கம் செய்வதற்கான நோட்டீசை, பா.ஜ., – எம்.பி., நிஷிகாந்த் துபே வழங்கி உள்ளார்.

இந்த சூழலில் இன்று காலை 11 மணிக்கு பார்லிமென்ட் இரு அவைகளும் கூடியது. லோக்சபா கூடியதும், நடப்பு பட்ஜெட் கூட்டத்தொடரின் முதல் அமர்வின் கடைசி நாளான இன்று 2026 ஜனவரியில் இறந்த எம்.பி பகவான் தாஸ் ரத்தோரை நினைவுக் கூரும் வகையில் இரங்கல் தீர்மானம் வாசிக்கப்பட்டது. இதைத்தொடர்ந்து எதிர்க்கட்சி எம்பிக்கள் அமெரிக்கா– இந்தியா வர்த்தக ஒப்பந்தம் உள்ளிட்ட பல்வேறு விஷயங்களை வலியுறுத்தி அமளியில் ஈடுபட்டனர்.

இதனால் அவையில் கூச்சல், குழப்பம் நிலவியது. அவை மதியம் 12 மணி வரை ஒத்திவைக்கப்பட்டது. பின்னர் அவை 12 மணிக்கு கூடிய போதும் எதிர்க்கட்சி எம்பிக்கள் அமளி தொடர்ந்ததால், மார்ச் 9ம் தேதி காலை 11 மணி வரை ஒத்திவைக்கப்பட்டது. பட்ஜெட் கூட்டத்தொடரின் முதல் அமர்வு இன்றுடன் நிறைவு அடைந்தது.

அதேநேரத்தில் காலை 11 மணிக்கு ராஜ்யசபா கூடி நடந்து வருகிறது. பட்ஜெட் மீதான விவாதங்களில் எம்பிக்கள் விவாதங்களை முன்வைத்தனர். இன்றுடன் முதல் அமர்வு ராஜ்யசபாவிலும் நிறைவு அடைகிறது.




தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் சென்னை, நேரு உள்விளையாட்டு அரங்கத்தில் மனிதவள மேலாண்மைத் துறை சார்பில் நடைபெற்ற விழாவில், தமிழ்நாடு அரசின் பணியாளர் தெரிவு முகமைகளான தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையம், மருத்துவப் பணியாளர் தேர்வு வாரியம் மற்றும் ஆசிரியர் தேர்வு வாரியம் மூலம் 2025–ஆம் ஆண்டில் நடத்தப்பட்ட தொகுதி–IV உள்ளிட்ட போட்டித் தேர்வுகளின் மூலம் தேர்ந்தெடுக்கப்பட்ட 9801 நபர்களுக்கு பணிநியமன ஆணைகளை வழங்கினார். இவ்விழாவில், துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின், மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் மா.சுப்பிரமணியன், மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அன்பில் மகேஸ் பொய்யாமொழி, மாண்புமிகு மனிதவள மேலாண்மைத் துறை அமைச்சர் என். கயல்விழி செல்வராஜ், சட்டமன்ற உறுப்பினர் இ.பரந்தாமன், தலைமைச் செயலாளர் நா. முருகானந்தம், பள்ளிக்கல்வித் துறை கூடுதல் தலைமைச் செயலாளர் பி.சந்திரமோகன், மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை கூடுதல் தலைமைச் செயலாளர் ப.செந்தில்குமார், மனிதவள மேலாண்மைத் துறை முதன்மைச் செயலாளர் சி. சமயமூர்த்தி, உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

## த.வெ.க. தலைவர் விஜய் அதிரடி பேச்சு!



சேலம், பிப். 13–

சேலத்தில் நடைபெறும் தவெக நிர்வாகிகள் சந்திப்புக் கூட்டத்தில் பேசிய கட்சித் தலைவர் விஜய், என்னை வீட்டை விட்டு வெளியே வா என்கிறார்களே, என் வீடு எது என்று தெரியுமா? என்று கேட்டு தன்னுடைய பேச்சைத் தொடங்கியிருக்கிறார்.

தவெக தலைவர் விஜய்யின் நிர்வாகிகள் சந்திப்பு, தேர்தல் பிரசாரக் கூட்டம், சேலம் சீலநாயக்கன்பட்டி, கேவிபி கார்டன் உள் வளாகத்தில் இன்று பகல் 12.30 மணிக்குத் தொடங்கியது. சேலம் மாவட்ட நிர்வாகிகள் பேசியதைத் தொடர்ந்து கட்சித் தலைவர் விஜய் பேசத் தொடங்கினார்.

அவர் பேசுகையில், இந்த உத்வேகம்தான் ஒரு சக்தியைக் கொடுக்கும். அது மட்டுமல்ல, மற்றவர்கள் நம்மை ஏளனமாகப் பார்க்கும் நேரத்தில், நம்மைக் குறைவாக எடைபோடும் நேரத்தில் தான் உத்வேகம் பிறக்கும். நாம் யார் என்று காட்ட வேண்டும் என்ற உத்வேகம் வரும். எந்த விஷயத்தில் நம்மை கிண்டலும் கேலியுமாகப் பேசினார்களோ அந்த விஷயத்தில் நம்மை நேர்மறையாக மாற்றுவதற்கு உத்வேகம் வரும். அங்கிருந்துதான் அந்த சக்தி உருவாகிறது என்று பேசினார்.

என்னைப் பற்றி பேசிய அந்தப் புள்ளியிலிருந்து ஆரம்பிக்கலாமா? ஏ, விஜய் வீட்டை விட்டு வெளியே வா என்கிறார்கள். அவர்களுகு என் வீடு எதுன்னு தெரியுமா? எங்க இருக்குன்னு தெரியுமா? என்னை சீண்டிப் பார்ப்பதாக நினைத்து கேலியும் கிண்டலுமாக பேசுபவர்களுக்குச் சொல்கிறேன். தமிழ்நாடு உங்களுக்கு மாநிலமாக இருக்கலாம், ஆனால் தமிழ்நாடுதான் என் வீடு

என் வீட்டில் எத்தனை பேர் இருக்கிறார்கள் என்று தெரியுமா? 8 கோடி பேர் இருக்கிறார்கள். ஒட்டுமொத்த தமிழ்நாடும் என் வீடு, ஒட்டுமொத்த தமிழக மக்களும் என் சொந்தம். தமிழ்நாட்டின் முதல் படை வீரனாக அவர்கள் கூட நிற்க வேண்டும் என்பதுதான் என் குறிக்கோள். அந்த எட்டு கோடிப் பேருக்கும் எல்லாமுமாக நிற்கப் போவது இந்த விஜய் தான். எல்லாம் கொடுக்கப் போவதும் நான்தான்.

இன்று உங்களிடம் வாக்கு கேட்டு மட்டும் வரவில்லை. ஆனா, இன்று உங்களிடம் நீதி கேட்டு வந்துள்ளேன். உங்களுக்காக நீதி கேட்கத்தான் வந்தேன். ஆனால் உங்களிடம் நீதி கேட்டு வந்துள்ளேன். இந்த விஜய் என்ன தப்பு செய்தேன். மக்களுக்காக நான் அரசியலுக்கு வந்தது தவறா?

எல்லாவற்றையும் ஒதுக்கித் தள்ளிவிட்டு அரசியலுக்கு வந்தது தவறா? பொதுக்கூட்டம் நடத்த மற்றவர்களுக்கு அனுமதி கொடுப்பார்கள். மற்ற கட்சிகளுக்கு கொடுப்பார்கள். ஆனால் எனக்கு கூட்டம் நடத்த அனுமதிக்க மாட்டார்கள், கொடுக்கவும் விட மாட்டார்கள். இதில் என்ன நியாயம். மக்களை நான் சந்திக்கவும், மக்கள் என்னை சந்திக்கவும் விட மாட்டார்கள் என்று கூறினார்.

தொடர்ந்து பேசிய அவர், மற்றவர்களுக்கு கூட்டத்துக்கு அனுமதி கொடுக்க நிலையான வழிகாட்டு நெறிமுறை இருக்கும். எனக்கு மட்டும் ஸ்டாலின் சார் வழிகாட்டு நெறிமுறைதான் கடைப்பிடிக்கப்படுகிறது என்று கூறினார்.

சேலத்தில் தவெக தலைவர் விஜய் பங்கேற்கும் பிரசார பொதுக் கூட்டத்துக்கு பல்வேறு நிபந்தனைகள் விதிக்கப்பட்டு, கட்டுப்பாட்டுடன் நடந்து வருகிறது. காலை முதலே விஜயைக் காண ஏராளமானோர் திரண்டிருந்தார்கள். ஐந்தாயிரத்துக்கும் குறைவானவர்களுக்கே அனுமதி வழங்கப்பட்டது. சரியான நேரத்துக்குள் விஜய் கூட்டம் நடைபெறும் இடத்துக்கு வருகை தந்த நிலையில், 12.30 மணிக்குள் கூட்டம் தொடங்கியது.

சேலம் தவெக நிர்வாகிகள் பேசிய நிலையில் விஜய் பேசத் தொடங்கினார். கொளுத்தும் வெயிலையும் பொருட்படுத்தாது தவெக தொண்டர்கள் விஜய் பேச்சைக் கேட்டனர்.

## 30 வருடத்திற்கு பின்
# தூசு தட்டப்பட்ட சட்டம்.. செம மூவ்..
## தலைகீழாக மாறப்போகிறது..!!








புதுடெல்லி, பிப். 13–

இந்திய அரசு அமேசான், கூகுள், மைக்ரோசாப்ட் போன்ற உலகின் மிகப்பெரிய கிளவுட் சேவை நிறுவனங்களுக்கு பட்ஜெட்டில் மிகப்பெரிய சலுகையை அறிவித்தார் மத்திய நிதியமைச்சர் நிர்மலா சீதாராமன். இது 30 வருடங்களுக்கு முன்பு இந்தியா பொருளாதாரத்தை மாற்ற வெளியான முக்கியமான அறிவிப்புக்கு இணையாக ஒரு அறிவிப்பு என்பது எத்தனை பேருக்கு தெரியும்.

இந்த அமேசான், கூகுள், மைக்ரோசாப்ட் போன்ற கிளவுட் நிறுவனங்கள் இந்தியாவில் டேட்டா சென்டர் அமைத்து, உலக வாடிக்கையாளர்களுக்கு சேவை வழங்கினால் 2047 வரை வரி செலுத்த வேண்டியதில்லை. அதாவது 20 ஆண்டுகளுக்கு முழுமையான வரி விலக்கு (tax holiday) அளிக்கப்படும் என பட்ஜெட் அறிவிப்பில் நிர்மலா சீதாராமன் தெரிவித்தார்.

இந்த சலுகை எந்த நிபந்தனையில் கிடைக்கும்?

இந்த வரி விலக்கு இந்தியாவிலிருந்து வெளிநாட்டு வாடிக்கையாளர்களுக்கு வழங்கப்படும் சேவைகளுக்கு மட்டுமே பொருந்தும். அதாவது:

இந்தியாவில் டேட்டா சென்டர் கட்ட வேண்டும்

இந்தியாவின் மின்சாரம், தண்ணீர், நிலம் பயன்படுத்த வேண்டும்

சிங்கப்பூர், துபாய், லண்டன் போன்ற வெளிநாட்டு வாடிக்கையாளர்களுக்கு கிளவுட் சேவை வழங்க வேண்டும்

இந்திய வாடிக்கையாளர்களுக்கு வழங்கும் சேவைகளுக்கு இந்த வரி விலக்கு இல்லை. ஆனால் வெளிநாட்டு வாடிக்கையாளர்களுக்கு சேவை வழங்கினால் முழு வரி விலக்கு கிடைக்கும்.

1991 சட்டம்

1991–இல் இந்தியா STPI (Software Technology Parks of India) திட்டத்தை தொடங்கியது. இந்தியாவில் இருந்து வெளிநாடுக்கு சாப்ட்வேர் சேவைகளை ஏற்றுமதி செய்யும் ஐடி நிறுவனங்களுக்கு 100% வரி விலக்கு அளித்தது. அதனால் பல வெளிநாட்டு நிறுவனங்கள் இந்தியாவில் அலுவலகம் திறந்தன, ஊழியர்களை பணியமர்த்தினர். இதுவே பெங்களூரை உலக ஐடி தலைநகராக மாற்றியது. இப்போது அதே உத்தி கிளவுட் மற்றும் AI துறைக்கு பயன்படுத்தப்படுகிறது.

| மாநிலங்கள் | டேட்டா சென்டர் எண்ணிக்கை | சந்தைப் பங்கு (%) | முக்கிய நகரம் |
|---|---|---|---|
| மகாராஷ்டிரா | 85 | 53% | மும்பை |
| தமிழ்நாடு | 35 | 20% | சென்னை |
| உத்தரப் பிரதேசம் | 25 | 10% | (என்.சி.ஆர்) நொய்டா |
| கர்நாடகா | 30 | 7% | பெங்களூரு |
| தெலுங்கானா | 20 | 5% | ஹைதராபாத் |

**தமிழ்நாட்டுக்கு பெரிய வாய்ப்பு**

தமிழ்நாடு இந்தியாவின் மிகப்பெரிய ஐடி மையங்களில் ஒன்று. சென்னை, கோயம்புத்தூரில் ஏற்கனவே பல டேட்டா சென்டர்கள் உள்ளன. இந்த வரி விலக்கு அறிவிப்பால் அமேசான், கூகுள், மைக்ரோசாப்ட் போன்ற நிறுவனங்கள் தமிழ்நாட்டில் புதிய டேட்டா சென்டர்களை அமைக்க வாய்ப்பு உள்ளது.

தமிழ்நாடு இந்தியாவின் மொத்த டேட்டா சென்டர் திறனில் 20% பங்கை வைத்திருக்கிறது. இது நாட்டின் இரண்டாவது பெரிய டேட்டா சென்டர் மாநிலமாக தமிழ்நாட்டை உயர்த்தியுள்ளது.

**தெற்கின் நுழைவாயில் – சென்னை**

சென்னை இந்தியாவை தென்கிழக்கு ஆசியாவுடன் இணைக்கும் முக்கிய இணைய நுழைவாயிலாக (gateway) உள்ளது. குறைந்த மின்சார கட்டணம் (competitive power tariffs) மற்றும் இரட்டை கிரிட் நம்பகத்தன்மை (dual–grid reliability) ஆகியவை சென்னையை டேட்டா சென்டர் நிறுவனங்களுக்கு மிகவும் ஈர்க்கும் இடமாக மாற்றியுள்ளன.

**தமிழ்நாட்டில் தற்போதைய திறன்**

தமிழ்நாட்டில் தற்போது 250 முதல் 300 மெகாவாட் வரை டேட்டா சென்டர் திறன் உள்ளது. இது விரைவில் மேலும் அதிகரிக்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

முக்கிய நிறுவனங்கள்

NTT, CtrlS, STT GDC, Sify போன்ற உலகளாவிய மற்றும் உள்நாட்டு நிறுவனங்கள் சென்னை மற்றும் அதன் சுற்றுப்புறங்களில் பெரிய டேட்டா சென்டர்களை இயக்கி வருகின்றன. இவை அமேசான், கூகுள், மைக்ரோசாப்ட் போன்ற நிறுவனங்களின் கிளவுட் சேவைகளுக்கு ஆதரவாக செயல்படுகின்றன.

**மும்பை டேட்டா சென்டர் சந்தை:**

மும்பையில் தற்போது 550 – 600 மெகாவாட் வரை டேட்டா சென்டர் திறன் உள்ளது. இங்கு Yotta, STT GDC, Nxtra, AdaniConneX, Sify போன்ற முக்கியமான நிறுவனங்கள் உள்ளது.

மத்திய அரசு கொண்டு வந்துள்ளத இப்புதிய சட்டத்தால் ஆயிரக்கணக்கான உயர்தர வேலை வாய்ப்புகள் உருவாகும். மேலும் மின்சாரம், இண்டர்நெட் இணைப்பு, ரியல் எஸ்டேட் தொடர்பான தொழில்களும், நிறுவனங்களும் வேகமாக வளரும். ஐடி ஊழியர்களின் சம்பளம் மற்றும் வாழ்க்கைத் தரம் உயரும். இந்த வரி விலக்கு 2047 வரை நீடிக்கும் என்பதால் இது இந்தியாவை உலக கிளவுட் மற்றும் AI உற்பத்தி மையமாக மாற்றும் மிகப்பெரிய முடிவாகும்.

## மத்திய அமைச்சர் அமித்ஷா காரைக்கால் வருகை!



காரைக்கால், பிப். 13–

மத்திய உள்துறை அமைச்சர் அமித்ஷா தமிழகம் மற்றும் காரைக்காலில் நடைபெறும் பல்வேறு நிகழ்ச்சிகளில் பங்கேற்க 2 நாள் சுற்றுப்பயணமாக இன்று (வெள்ளிக்கிழமை) திருச்சி வருகிறார். டெல்லியில் இருந்து தனி விமானம் மூலம் இன்று இரவு 9 மணிக்கு திருச்சி விமான நிலையம் வருகிறார்.

பின்னர், அங்கிருந்து சாலை மார்க்கமாக திருச்சி கலெக்டர் அலுவலக சாலையில் உள்ள நட்சத்திர விடுதியில் இரவு தங்கி ஓய்வு எடுக்கிறார். பின்னர் நாளை 14–ந்தேதி (சனிக்கிழமை) காலை 10.30 மணிக்கு நட்சத்திர விடுதியில் இருந்து காரில் புறப்பட்டு திருச்சி விமான நிலையம் சென்று அங்கிருந்து ஹெலிகாப்டர் மூலம் காரைக்கால் வருகிறார்.

காரைக்கால் வரிச்சிக்குடி அரசு பாலிடெக்னிக் கல்லூரியில் அமைந்துள்ள ஹெலிபேடு மைதானத்தில் காலை 11 மணியளவில் அமித்ஷா வந்து இறங்குகிறார். பின்னர் அங்கிருந்து பாரதியார் சாலை மற்றும் திருநள்ளாறு சாலை வழியாக சென்று, நகராட்சி திடலில் மதியம் 11.30 மணியளவில் நடைபெறும் பொதுக்கூட்டத்தில் கலந்து கொண்டு தேர்தல் பிரசாரத்தை தொடங்கி வைத்து பேசுகிறார். பொதுக்கூட்டம் முடிந்ததும் திருநள்ளாறு சாலையில் உள்ள தனியார் ஓட்டலில் முக்கிய பிரமுகர்களை சந்தித்து ஆலோசனை நடத்துகிறார். பின்னர் காரைக்கால் பா.ஜ.க கிளை கமிட்டி நிர்வாகி ஒருவர் இல்லத்தில் கட்சி கொடி ஏற்றி வைக்கிறார். பின்னர் நிகழ்ச்சிகளை முடித்துக்கொண்டு மாலை 4 மணிக்கு மீண்டும் ஹெலிகாப்டர் மூலம் திருச்சிக்கு புறப்பட்டு செல்கின்றார். அமித் ஷாவின் வருகையையொட்டி சாலை முழுவதும் பா.ஜ.க–வினர் உற்சாக வரவேற்பு அளிக்க ஏற்பாடுகள் செய்து வருகின்றனர். மத்திய உள்துறை அமைச்சர் அமித்ஷா பங்கேற்கும் பொதுக்கூட்டத்தில் சுமார் 12 ஆயிரம் பேர் கூடுவார்கள் என்று கூறப்படுகிறது. பாதுகாப்பு பணியில் 700 போலீசார் ஈடுபடுத்தப்பட உள்ளனர். இதற்காக புதுச்சேரியில் இருந்து 350 போலீசார் வர உள்ளனர். மேலும் 7 பட்டாலியன் துணை ராணுவ படையினரும் பாதுகாப்பு பணியில் ஈடுபட உள்ளார்கள்.

6 இடங்களில் பார்க்கிங் வசதி ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. பாதுகாப்பு காரணங்களுக்காக மாவட்டம் முழுவதும் டிரோன் பறக்க தடை விதிக்கப்பட்டுள்ளது.

முன்னதாக காரைக்கால் வருகை தரும் மத்திய உள்துறை அமைச்சர் அமித்ஷாவுக்கு உற்சாக வரவேற்பு அளிக்க பா.ஜ.க மாநில தலைவர் வி.பி.ராமலிங்கம் தலைமையில் அக்கட்சியினர் ஏற்பாடு செய்துள்ளனர். செண்டை மேளம், தாரை, தப்பட்டை முழங்க வரவேற்பு அளிக்கப்படுகிறது.

மேலும், அமித்ஷா பங்கேற்கும் நிகழ்ச்சி இடங்களில் கொடி, தோரணங்கள் வழி நெடுகிலும் அமைக்கப்பட்டுள்ளது. இதனால் அங்கு விழா கோலம்போல காட்சியளிக்கிறது.

மத்திய அமைச்சர் அமித்ஷா வருகையையொட்டி மாநில பா.ஜ.க தலைவர் வி.பி.ராமலிங்கம், சபாநாயகர் ஏம்பலம் செல்வம், அமைச்சர் நமச்சிவாயம் மற்றும் பா.ஜ.க எம்.எல்.ஏ.க்கள் மற்றும் மாநில நிர்வாகிகள் காரைக்காலிலேயே முகாமிட்டு ஏற்பாடுகளை செய்து வருகின்றனர்.

# தலையங்கம்

மதுரை மணி
வெள்ளிக்கிழமை 13.02.2026
விசுவாவசு தமிழ் வருடம்
மாசி மாதம் 01-ம் தேதி

## சின்னாபின்னமாகி ஐடி துறை பங்குகள்..




இந்திய ஐடி துறை பங்குகள் இன்று உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு முதலீட்டாளர்களிடம் சிக்கி கொண்டு சின்னாபின்னமாகி வருகிறது என்றால் மிகையில்ல, ஏற்கனவே பெரும் சரிவுடன் வர்த்தகம் செய்து வரும் இந்திய ஐடி சேவை நிறுவன பங்குகள் இன்று பெரும் விற்பனை அழுத்தத்தை எதிர்கொண்டு உள்ளது. இன்றைய வர்த்தகத்தில் Nifty IT இன்டெக்ஸ் 4%க்கும் மேல் சரிந்து 4 மாத குறைந்த அளவை எட்டியது. மேலும் ஒரே நாளில் IT நிறுவனங்களின் மதிப்பு சுமார் ரூ.1.3 லட்சம் கோடி குறைந்ததுள்ளதால் முதலீட்டாளர்கள் பெரும் சோகத்தில் உள்ளனர். இந்திய முதலீட்டு சந்தையை பொருத்தவரையில் வங்கி மற்றும் நிதி சேவை துறை பங்குகளுக்கு பின்பு டெக் நிறுவன பங்குகள் மிகவும் விருப்பமான முதலீட்டு தளமாக இருந்து வந்தது.

இந்த நிலையில் ஏஐ ஆதிக்கம், வருவாய் சரியும் என்ற அச்சம், டாலர் மதிப்பில் ஏற்பட்டுள்ள பாதிப்பு ஆகியவை தற்போது இந்திய ஐடி துறைக்கு எதிராக திரும்பியுள்ளது. இதன் எதிரொலியாக இன்றைய வர்த்தகத்தில் TCS, Infosys, Wipro, HCL Tech, Mpha–sis உள்ளிட்ட முக்கிய நிறுவனங்களின் பங்குகள் 4% முதல் 5% வரை வீழ்ச்சியடைந்துள்ளது. இந்த திடீர் வீழ்ச்சிக்கு இரண்டு பெரிய காரணங்கள் உள்ளன.

முதலாவது காரணம் செயற்கை நுண்ணறிவு (AI) குறித்த அச்சம். Anthropic என்ற அமெரிக்கா நிறுவனம் "Claude Cowork" என்ற புதிய AI கருவியில் 11 பிளகின்களை அறிமுகப்படுத்தியுள்ளது. இது பல்வேறு துறையை சேர்ந்த நிறுவனங்கள் வழக்கமாக ஐடி சேவை நிறுவனங்களுக்கு ஒப்படைக்கும் பல பணிகளை தானாகச் செய்யக்கூடியதாக வடிவமைக்கப்பட்டுள்ளது.

உதாரணமாக ஒப்பந்தங்களை ஆய்வு செய்வது, சட்ட ஆவணங்களை தயாரிப்பது, விதிமுறைகள் பின்பற்றி பணிகளை முடிப்பது, வழக்கமான அலுவலக பணிகள் போன்ற பல செயல்பாடுகளை மனிதர்களின் உதவியின்றி செய்ய முடியும் என கூறப்படுகிறது. இதுவரை இத்தகைய சேவைகள் வாயிலாக தான் இந்திய ஐடி நிறுவனங்களுக்கு பல பில்லியன் டாலர் வருமானத்தை உருவாக்கி வந்தது. தற்போது Claude Cowork மூலம் இது முழுமையாக செய்யப்படும் பட்சத்தில் இந்திய ஐடி சேவை நிறுவனங்களின் வர்த்தகம் பாதிக்கும் சூழ்நிலை உருவாகியுள்ளது. முன்பு AI தொழில்நுட்பம் ஐடி நிறுவனங்களுக்கு உதவும் கருவி என கருதப்பட்டது. ஆனால் இப்போது அதே AI தொழில்நுட்பம் மனிதர்களின் பணியை மாற்றிவிடுமோ என்ற அச்சம் உருவாக்கியுள்ளது. சில சந்தை ஆய்வாளர்கள் குறிப்பிட்ட டெக் சேவை பிரிவுகளில் வருமானம் 40% வரை குறையக்கூடும் என எச்சரிக்கை விடுத்துள்ளனர். இந்த மாற்றமே முதலீட்டாளர்களை பதற்றத்தில் பங்குகளை விற்பனை செய்ய தூண்டியுள்ளது.

அமெரிக்க வேலைவாய்ப்பு தரவின் தாக்கம் இரண்டாவது காரணம் அமெரிக்க பொருளாதார தரவுகள். கடந்த மாதம் அமெரிக்காவில் 1,30,000 புதிய வேலைகள் உருவாகியுள்ளன. வேலைவாய்ப்பு இல்லாதோரின் விகிதம் 4.3% ஆக குறைந்துள்ளது. இது அமெரிக்க பொருளாதாரம் இன்னும் வலுவாக இருப்பதைக் காட்டுகிறது. அமெரிக்க பொருளாதாரம் வலுவாக இருந்தால், அந்நாட்டு மத்திய வங்கி வட்டி விகிதத்தை உடனடியாகக் குறைக்க வாய்ப்பு குறையும். வட்டி விகிதக் குறைப்பு இல்லையெனில் வளர்ச்சி சார்ந்த பங்குகள், குறிப்பாக ஐடி பங்குகள் மீது வெளிநாட்டு முதலீட்டாளர்களின் ஆர்வம் குறையக்கூடும். இதுவும் இந்திய ஐடி பங்குகளுக்கு கூடுதல் அழுத்தத்தை ஏற்படுத்தியுள்ளது. TCS–ன் மோசமான நிலை இந்தியாவின் மிகப்பெரிய ஐடி நிறுவனமான TCS பங்குகள் இன்று 4.8% சரிந்து 2,766.00 ரூபாய் என்ற 52 வார குறைந்த விலையைத் தொட்டது. மேலும், அதன் சந்தை மதிப்பு 10 லட்சம் கோடி ரூபாய் என்ற சாதனை அளவில் இருந்து கீழே சரிந்தது முதலீட்டாளர்கள் மத்தியில் பெரும் அச்சத்தை உருவாக்கியுள்ளது. பெரிய மற்றும் நிலையான நிறுவனம் கூட இவ்வாறு சரிவடைந்தால், அது முழு துறையிலும் அச்சத்தை அதிகரிக்கும். இதுதான் இன்று நடந்துள்ளது.

தமிழ்நாடு IT துறைக்கு பெரும் அதிர்ச்சி தமிழ்நாடு இந்தியாவின் மிகப்பெரிய IT ஹப்களில் ஒன்று. சென்னை, கோயம்புத்தூர், திருச்சி, மதுரை, சேலம், வேலூர் உள்ளிட்ட நகரங்களில் லட்சக்கணக்கான இளைஞர்கள் TCS, Infosys, Wipro, HCL Tech போன்ற நிறுவனங்களில் பணியாற்றி வருகின்றனர். AI கருவிகள் டெக் பணிகளை ஆட்டோமேட் செய்யத் தொடங்கியால், குறிப்பாக ஃப்ரெஷர்கள் மற்றும் நடுத்தர அளவிலான ஊழியர்களுக்கு பணிநீக்க அபாயம் அதிகரிக்கும். சென்னை மற்றும் கோயம்புத்தூர் போன்ற நகரங்களில் வீட்டு வாடகை, EMI, கல்வி செலவு ஆகியவற்றுடன் போராடும் இளைஞர்களுக்கு இந்த சரிவு வேலைவாய்ப்புகளை பெறுவதில் சவாலை உருவாக்கும்.

தமிழ்நாடு IT ஊழியர்களுக்கு என்ன செய்ய வேண்டும்?:

தமிழ்நாட்டில் IT துறையில் பணியாற்றும் இளைஞர்கள் இப்போது பெரும் கவலையில் உள்ளனர். AI தொழில்நுட்பம் பணிகளை எடுத்துக்கொள்ளும் என்ற அச்சம், வேலை இழப்பு, சம்பள உயர்வு தாமதம் ஆகியவற்றை ஏற்படுத்தும். சென்னை, கோயம்புத்தூர், திருச்சி போன்ற நகரங்களில் உள்ள IT ஊழியர்கள் தங்கள் திறன்களை AI பிரிவில் மேம்படுத்த வேண்டிய நிலை உருவாகியுள்ளது. நிறுவனங்கள் AI தொழில்நுட்பத்தை திறமையாக பயன்படுத்தும் ஊழியர்களை மட்டுமே தக்க வைத்துக்கொள்ளும் என்று நிபுணர்கள் எச்சரிக்கின்றனர்.

இந்த சரிவு தற்காலிகமானதா அல்லது நீண்டகால மாற்றத்தின் தொடக்கமா என்பது அடுத்த சில மாதங்களில் தெரியவரும். தமிழ்நாட்டு இளைஞர்கள் AI திறன்களை விரைவாக கற்றுக்கொண்டு தங்களை தயார்படுத்திக் கொள்வது அவசியம்.

அமெரிக்க AI நிறுவனம் Anthropic–ன் Claude Cowork கருவி அறிமுகமானது முக்கிய காரணம். இது கம்பியூட்டர் கோடிங் தவிர அனைத்து அலுவலகப் பணிகளையும் தானாக செய்யும் திறன் கொண்டாதாக உள்ளது. இதனால் பல்வேறு துறை சேர்ந்த நிறுவனங்கள் டெக் சேவைகளை வங்கும் இந்திய IT நிறுவனங்களின் வர்த்தகம் குறைந்து வருவாய் பாதிக்கப்படும் என்ற அச்சத்தில் முதலீட்டாளர்கள் பங்குகளை விற்றனர்.

2. தமிழ்நாட்டில் IT ஊழியர்களுக்கு பணிநீக்க அபாயம் உள்ளதா? ஆம், அதிக அபாயம் உள்ளது. சென்னை, கோயம்புத்தூர், திருச்சி, மதுரை போன்ற நகரங்களில் லட்சக்கணக்கான இளைஞர்கள் TCS, Infosys, Wipro போன்ற நிறுவனங்களில் பணியாற்றுகின்றனர். AI கருவிகள் பணிகளை தானியங்கி செய்யத் தொடங்கியால், ஃப்ரெஷர்கள் மற்றும் நடுத்தர ஊழியர்களுக்கு பணிநீக்க அபாயம் அதிகரிக்கும். வீட்டு வாடகை, EMI, கல்வி செலவு ஆகியவற்றை சமாளிக்கும் இளைஞர்களுக்கு இது பெரும் அதிர்ச்சி. 3. தமிழ்நாடு IT ஊழியர்கள் இப்போது என்ன செய்ய வேண்டும்? தங்கள் திறன்களை AI உடன் இணைத்து மேம்படுத்த வேண்டும். AI கருவிகளை திறமையாக பயன்படுத்தி வேலை செய்யும் ஊழியர்களை மட்டுமே நிறுவனங்கள் தக்க வைத்துக்கொள்ளும் என்று நிபுணர்கள் எச்சரிக்கின்றனர். சென்னை, கோயம்புத்தூர் போன்ற நகரங்களில் உள்ள இளைஞர்கள் AI திறன்களை விரைவாக கற்றுக்கொண்டு தயாராக வேண்டும்.

# திராவிட 2.0 ஆட்சி: மகளிர் உரிமைத் தொகை ரூ.2,000 ஆக உயர்த்தப்படும்.. முதல்வர் ஸ்டாலின்..!



சென்னை, பிப். 13–

கலைஞர் மகளிர் உரிமைத்தொகை திட்டம் என்பது தமிழக அரசால் செயல்படுத்தப்படும் ஒரு முக்கியமான நலத்திட்டமாகும். திராவிட 2.0 ஆட்சியில் மகளிர் உரிமை தொகை ரூ.2,000 ஆக உயர்த்தி வழங்கப்படும் என்று முதல்வர் ஸ்டாலின் அறிவித்துள்ளார்.. இதுகுறித்து முதல்வர் ஸ்டாலின் வெளியிட்ட அறிக்கையில் " தமிழ்நாட்டு மகளிருக்கு இந்த ஸ்டாலின் தந்த உறுதிமொழிதான் உரிமைத்தொகை. யார் தடை ஏற்படுத்தினாலும் அதிலிருந்து பின்வாங்க மாட்டேன். தேர்தலைக் காரணம் காட்டி, மூன்று மாதங்களுக்கு உரிமைத்தொகையை முடக்கப் பார்க்கிறார்கள். முந்திக்கொண்டது நமது #DravidianModel அரசு!

பிப்ரவரி, மார்ச், ஏப்ரல் மாதங்களுக்கான முன்பணமாக ரூ.3 ஆயிரம் + கோடைக்காலச் சிறப்புத் தொகுப்பாக ரூ.2 ஆயிரம்! 1.31 கோடி கலைஞர் மகளிர் உரிமைத் திட்டப் பயனாளிகளுக்கும் இன்று காலை 5 ஆயிரம் ரூபாய் வரவு வைக்கப்பட்டிருக்கிறது. வெல்லும் தமிழ்ப்பெண்கள் ஆதரவோடு அடுத்தும் நாங்கள்தான் வெல்வோம்!

DravidianModel 2.0–இல் ஆயிரம் ரூபாய் உரிமைத்தொகையை 2 ஆயிரமாக உயர்த்தி வழங்குவோம்! இது, என் சகோதரிகளுக்கு இந்த முத்துவேல் கருணாநிதி ஸ்டாலின் கொடுக்கும் வாக்குறுதி!" என்று தெரிவித்துள்ளார்.

# வாகன ஓட்டிகளுக்கு மகிழ்ச்சி செய்தி..! சுங்கக் கட்டணத்தில் 25 சதவீதம் குறைப்பு..!

சென்னை, பிப். 13–

நகரங்களுக்கு இடையே பயணிக்கும் போது நேரத்தை மட்டுமல்ல, எரிபொருள் மற்றும் பணத்தையும் மிச்சப்படுத்த நாடு முழுவதும் விரைவுச் சாலைகளின் வலையமைப்பு கட்டமைக்கப்பட்டு வருகிறது. இருப்பினும், விரைவுச் சாலை பயனர்களைத் தொந்தரவு செய்யும் ஒரு விஷயம் சுங்க வரி. இந்த சாலைகள் பொதுவாக அதே




தூரத்திற்கு நெடுஞ்சாலை சுங்கக் கட்டணங்களை விட 25 சதவீதம் அதிகமாக வசூலிக்கின்றன. இருப்பினும், விதிகளில் மாற்றத்தை அரசாங்கம் அறிவித்துள்ளது.

பிப்ரவரி 15 முதல், விரைவுச் சாலைகள் குறைந்த கட்டணத்தை வசூலிக்கும். பகுதியளவு செயல்படும் தேசிய விரைவுச் சாலைகளைப் பயன்படுத்துபவர்களுக்கான கட்டணக் கட்டணங்களைக் குறைக்க அரசாங்கம் தேசிய நெடுஞ்சாலை சுங்கக் கட்டண விதிகளை திருத்தி உள்ளது. திருத்தப்பட்ட விதிகள் பிப்ரவரி 15 முதல் அமலுக்கு வரும் என்று சாலைப் போக்குவரத்து மற்றும் நெடுஞ்சாலைகள் அமைச்சகம் தெரிவித்துள்ளது. தேசிய நெடுஞ்சாலை சுங்கக் கட்டண விதிகள், 2008 இல் திருத்தங்களை அரசாங்கம் அறிவித்துள்ளது என்று அறிக்கையில் கூறப்பட்டுள்ளது.

**எந்த வகையான சாலைகளுக்கு விலக்கு அளிக்கப்படுகிறது?**

இந்தத் திட்டத்தின் கீழ், ஒரு தேசிய விரைவுச் சாலை தொடக்கத்திலிருந்து முடிவு வரை முழுமையாக செயல்படவில்லை என்றால், சாதாரண தேசிய நெடுஞ்சாலையின்படி குறைந்த விகிதத்தில் கட்டணம் வசூலிக்கப்படும் என்று அமைச்சகம் தெரிவித்துள்ளது. தற்போது, தேசிய விரைவுச் சாலைகளில் மொத்த பயனர் கட்டணம் சாதாரண தேசிய நெடுஞ்சாலை பயனர் கட்டணத்தை விட 25 சதவீதம் அதிகமாக உள்ளது. ஏனெனில் அவை வேகமான, மென்மையான பயண அனுபவத்தை வழங்குகின்றன.


**இதுவரை என்ன விதிகள் உள்ளன?**

விரைவுச்சாலை தொடக்கம் முதல் முடிவு வரை முழுமையாக செயல்படாவிட்டாலும், முடிக்கப்பட்ட பகுதிக்கு முழு கட்டணம் வசூலிக்கப்படும் என்று அமைச்சகம் தெளிவுபடுத்தியுள்ளது.

இந்தக் கட்டணம் ஒரு நெடுஞ்சாலையை விட 25 சதவீதம் அதிகம். புதிய விதியின்படி, ஒரு தேசிய விரைவுச்சாலை தொடக்கம் முதல் முடிவு வரை முழுமையாக செயல்படவில்லை என்றால், முடிக்கப்பட்ட பகுதிக்கு மட்டுமே தேசிய நெடுஞ்சாலை கட்டண விதிகள், 2008 இன் படி சாதாரண தேசிய நெடுஞ்சாலை விகிதத்தை விட குறைவான கட்டணம் வசூலிக்கப்படும்.

இதனிடையே, உத்தரபிரதேசம், பீகார், மகாராஷ்டிரா மற்றும் மத்தியப் பிரதேசம் உட்பட நாட்டின் பல்வேறு பகுதிகளில் பல முழுமையடையாத விரைவுச்சாலைகள் கட்டுமானத்தில் உள்ளன. சில பிரிவுகள் முழுமையாக நிறைவடைவதற்கு முன்பே சுங்கச்சாவடிகள் வசூலிக்கப்படுவதாகவும், மத்தியப் பிரதேசத்தில் உள்ள NH–46 உட்பட பல விரைவுச்சாலைகளில் முழுமையடையாத திட்டங்களுக்கு கட்டணம் வசூலிக்கப்படுவதாகவும் புகார்கள் வந்துள்ளன. இந்தப் புகார்களைத் தொடர்ந்து, கட்டுமானத்தில் உள்ள விரைவுச்சாலைகளில் சுங்கச்சாவடிகள் வசூலிக்க சாலைப் போக்குவரத்து அமைச்சகம் முடிவு செய்துள்ளது.

# இராமநாதபுரத்தில் திமுகவினர் கண்டன ஆர்ப்பாட்டம்!



ராமநாதபுரம், பிப். 13–


இராமநாதபுரம் மாவட்ட ஆட்சியர் அலுவலகம் முன்பு திமுக தலைமையிலான மதச்சார்பற்ற முற்போக்கு கூட்டணி கட்சிகளின் சார்பில் தமிழ்நாட்டின் உரிமைகளை பறிக்கும் ஒன்றிய பாஜக அரசின் தமிழ்நாடு பட்ஜெட்டை கண்டித்தும், அதற்கு துணைபோகும் அதிமுகவை கண்டித்தும் கண்டன ஆர்ப்பாட்டம் நடைபெற்றது. இந்த ஆர்ப்பாட்டத்திற்கு திமுக கழக மாவட்ட செயலாளரும் சட்டமன்ற உறுப்பினருமான காதர் பாட்ஷா முத்துராமலிங்கம் தலைமையேற்றார். இந்நிகழ்வில் திராவிடர் கழகத் தலைவர் கி. வீரமணி முன்னிலை வகித்து கண்டன உரையாற்றினார். தனது உரையில், ஒன்றிய அரசின் பட்ஜெட் தமிழ்நாட்டின் வளர்ச்சி, நலத்திட்டங்கள் மற்றும் மாநில உரிமைகளை பாதிக்கும் வகையில் அமைந்துள்ளதாக அவர் குற்றம் சாட்டினார். தமிழ்நாட்டின் நியாயமான பங்கு மற்றும் உரிமைகளை பாதுகாக்க அனைத்து அரசியல் மற்றும் சமூக அமைப்புகளும் ஒன்றிணைந்து குரல் கொடுக்க வேண்டியது அவசியம் என வலியுறுத்தினார். மேலும் மாநில, நகர மற்றும் ஒன்றிய கழக செயலாளர்கள், கழக முன்னோடிகள், வட்ட கழக நிர்வாகிகள், கழக உடன்பிறப்புகள் மற்றும் பொதுமக்கள் பெருந்திரளாக கலந்து கொண்டு ஒன்றிய அரசின் அநீதிக்கு எதிராக கண்டன கோஷங்களை எழுப்பினர். ஆர்ப்பாட்டம் அமைதியான முறையில் நடைபெற்றது.



பழனி மாரியம்மன் கோவிலில், பகவதிபிள்ளை குடும்பத்தார் சார்பாக, மண்டகப்படி நடைபெற்றது. இதில் பழனியைச்சேர்ந்த திரைப்பட நடிகர், பிக்பாஸ் சீசன் 4 வின் வெற்றியாளர் மற்றும் கலைஞர் டிவி புகழ், வா தமிழா வா நிகழ்ச்சி ஒருங்கிணைப்பாளர் ஆரிஅர்ச்சுணன் அவர்கள் சாமி தரிசனம் செய்தார். பிறகு பக்தர்களுக்கு அன்னதானம் வழங்கி சிறப்பித்தார். (பழனியில் வழக்கறிஞர் உதயசங்கர் அவர்களின் சகோதரர் என்பது குறிப்பிடத்தக்கது). இவர்களின் சகோதரி பேபி என்கிற ஹேமலதாவின் கணவர் இயந்திரப் பொறியாளர் சொ. சிவலிங்கம் மற்றும் பலர் உள்ளனர்.



# சிவனின் ஆசிபெற்ற ராசிகள்?



பிறந்த தேதியின் அடிப்படையில் நாம் அனைவரும் நமக்கான ஒரு தனித்துவ ரேடிக்ஸ் எண் கொண்டுள்ளோம். 1 முதல் 9 வரை குறிக்கப்படும் இந்த ரேடிக்ஸ் எண்கள், நம் குணாதிசயங்களை பிரதிபலிப்பதோடு, நம் எதிர்காலத்தையும் தெரிவிக்கிறது. மேலும், நம் பலம் என்ன? பலவீனம் என்ன? நமக்கு ஆதரவு கிடைக்கும் இடம் எது? நம்மை வழிநடத்தும் சக்தி எது? என்பதை அறிந்துக்கொள்ள முடியும். அந்த வகையில் சிவனின் ஆசிர்வாதம் பெற்ற நபர் யார்? சிவனின் ஆசியால் அவர்கள் பெறும் நன்மைகள் என்ன? என்பது குறித்து காணலாம்!

**ரேடிக்ஸ் எண் – 2**

ஆண்டின் எந்த ஒரு மாதத்திலும் 2, 11, 20 & 29 ஆகிய தேதிகளில் பிறந்தவர்களுக்கு




ரேடிக்ஸ் எண் 2 வழங்கப்படுகிறது. ரேடிக்ஸ் எண் 2 கொண்டவர்களின் ஆளும் கிரகமாக சந்திரன் பார்க்கப்படுகிறார். மேலும், சிவபெருமானின் ஆசி பெற்ற நபர்களாகவும் இருக்கின்றனர். சிவனுக்கும் – சந்திரனுக்கும் இடையே இணக்கமான தொடர்பு, ரேடிக்ஸ் எண் 2 கொண்டவர்களின் வாழ்க்கையில் நேர்மறையான தாக்கத்தை கொண்டு வருகிறது.

சிவனின் ஆளுமை, ரேடிக்ஸ் எண் 2 கொண்டவர்களின் வாழ்க்கையில் நேர்மறை தாக்கத்தை கொண்டு வருகிறது. ரேடிக்ஸ் எண் 2 கொண்டவர்களின் தன்னம்பிக்கையை அதிகரிக்கிறது, எதிர்பார்த்த மாற்றத்தை அவர்களின் வாழ்க்கையில் கொண்டு வருகிறது. சவால்கள் நிறைந்த பணிகளையும் தைரியமாக எடுத்து செய்யலாம். சிவனின் நல்லாசியால், அவர்களை சுற்றி நேர்மறை ஆற்றலை கொண்ட நபர்கள் சூழ்ந்திருப்பார்கள்.

அவர்களின் இலக்கு சிறியதாக இருப்பினும், அதன் பலன் பெரிதாக இருக்கும். அவர்களின் எண்ணத்திற்கு ஏற்றபடி, எதிர்பார்ப்புகள் அனைத்தும் பூர்த்தியாகும். ரேடிக்ஸ் எண் 2 கொண்டவர்களின் மற்றும் ஒரு சிறப்பு இயல்பாக, அவர்களின் ஆன்மீக நாட்டம் பார்க்கப்படுகிறது. குறிப்பாக, சிவன் மீது அதீத ஈர்ப்பு கொண்டவர்களாக இவர்கள் இருப்பது உண்டு!

**ரேடிக்ஸ் எண் 3**

மாதத்தின் 3, 12, 21, 30 ஆகிய தேதிகளில் பிறந்தவர்களுக்கு ரேடிக்ஸ் எண் 3 வழங்கப்படுகிறது. அறிவு, ஞானம், ஆற்றல், ஆன்மீகத்துடன் தொடர்பு கொண்ட இந்த எண், சிவனால் ஆசிர்வதிக்கப்பட்ட ஒரு




எண்ணாகவும் பார்க்கப்படுகிறது. மூன்று கண், திரிசூலம் என மூன்று எனும் எண்ணுடன் நெருங்கிய தொடர்பு கொண்ட ஒரு தெய்வமாக சிவன் பார்க்கப்படுகிறார்.

சிவனின் நேர்மறையான பார்வையை பெறும் இந்த ரேடிக்ஸ் எண் 3, தங்கள் செய்யும் விஷயங்களில் எடுக்கும் முயற்சிகளில் சிவனின் பிரதிபலிப்பை காணலாம். சிவனின் தாக்கம் அவர்களின் செயல் ஒவ்வொன்றிலும் காணப்படும். எதிர்பார்த்த வெற்றிகளை காண்பார்கள், எடுக்கும் முயற்சிகள் அனைத்திலும் வெற்றி பெறுவார்கள்.

ரேடிக்ஸ் எண் 3 கொண்டவர்கள் தங்கள் வாழ்க்கையில் எதிர்வரும் பிரச்சனைகளை தவிர்க்க, வாரம் தோறும் திங்கள்கிழமைகளில் சிவன் கோவில் சென்று முறையாக வழிபட்டு வருவது நல்லது!

**ரேடிக்ஸ் எண் 5**

மாதத்தின் 5, 14, 23 ஆகிய தேதிகளில் பிறந்தவர்கள் ரேடிக்ஸ் எண் 5 பெறுவார்கள்.

எண் கணிதத்தில் எண் 5 ஆனது புதன் கிரகத்தால் ஆளப்படும் ஒரு எண் ஆகும். படைப்பாற்றல், அறிவாற்றல், பேச்சுதிறமைக்கு பெயர் பெற்ற இந்த எண் ஆனது, சுதந்திரத்தை விரும்பும்




எண்ணாகவும் பார்க்கபடுகிறது; சாசக விரும்பிகளாகவும் இவர்கள் பார்க்கப்படுகின்றனர்.

ரேடிக்ஸ் எண் 5 கொண்டவர்கள் அடிப்படையில் ஆற்றல் மிக்கவர்களாகவும், அன்பானவர்களாகவும் காணப்படுகின்றனர். ஒரே நேரத்தில் பல்வேறு விஷயங்களை சிறப்பாக செய்யும் சகலகலா வல்லவர்களாகவும் இருக்கின்றனர். எண் 5 கொண்டவர்களிடம் காணப்படும் இந்த பண்புகள் பெரும்பாலும் சிவபெருமானுடன் ஒத்துப்போகிறது. அந்த வகையில், சிவனின் ஆசி பெற்ற ஒரு எண்ணாகவே இந்த ரேடிக்ஸ் எண் 5 பார்க்கப்படுகிறது.

**ரேடிக்ஸ் எண் 7**

எந்த ஒரு மாதத்திலும் 7, 16, 25 ஆகிய தேதிகளில் பிறந்தவர்களுக்கு ரேடிக்ஸ் எண் 7 வழங்கப்படுகிறது. ரேடிக்ஸ் எண் 7 கொண்டவர்கள்தன்னம்பிக்கை கொண்டவர்கள்; மன உறுதி கொண்டவர்கள்.




தெளிவான முடிவுகள் மற்றும் தீர்க்கமான செயல்திட்டங்கள் மூலம் தனது வாழ்க்கையை சிறப்பாக மாற்றிக்கொள்ளும் வல்லமை படைத்தவர்கள்.

கேதுவை ஆளும் கிரகமாக கொண்ட இவர்கள், சிவபெருமானுடன் நெருக்கமான தொடர்பு கொண்டவர்கள். அடிப்படையில் ஆன்மீகத்தில் அதீத ஆர்வம் கொண்ட இவர்கள், சிவபெருமானின் ஆசியுடன், அவரின் வல்லமையும் கொண்டுள்ளனர். சிவனின் நேர்மறையான பார்வையால், செல்வ – செழிப்புடன் மகிழ்ச்சியான வாழ்க்கையை வாழலாம். நிம்மதியான வாழ்க்கை வாழும் வாய்ப்பும் கிடைக்கும்.

**ரேடிக்ஸ் எண் 9**

சிவபெருமானின் கருணை பெற்ற ஒரு எண் கணித எண்ணாக எண் 9 பார்க்கப்படுகிறது. ரேடிக்ஸ் எண் 9 கொண்டவர்கள் உண்மையில் கருணை உள்ளம் கொண்டவர்கள். செவ்வாய் கிரகத்தை ஆளும் கிரகமாக கொண்ட இவர்களுக்கு சிவபெருமானின் ஆசியுடன், செவ்வாய் கிரகத்தின்




ஆளுமை மற்றும் வலிமையும் கிடை க்கிறது. செய்யும் காரியங்களில் தெளிவு, துணிச்சல் என தனி அடையா ளத்தை பெறுகின்றனர்.

தொழில் வாழ்க்கையில் இவர்கள் எடுக்கும் முயற்சிகள் பெரும்பாலும் வெற்றியை தேடி தரும். தனது முன்னேற்றத்துடன் தன்னை சார்ந்து உள்ளவர்களின் முன்னேற்றத்தையும் உறுதி செய்யும் இவர்களுக்கு, காலம் எதிர்பார்த்த திருப்பங்களை பெற்று தருகிறது.

சிவனின் ஆசிர்வாதத்தால், சமூகத்தில் கணிசமான மரியாதையும், மதிப்பும் பெறுகின்றனர். சமூகத்தில் உயரிய அந்தஸ்த்து பெறும் வாய்ப்பும் காணப்படுகிறது .

# இ-சேவை மற்றும் ஆதார் சேவை மைய தொழிலாளர்கள் வேலைநிறுத்தம்!

ராமநாதபுரம், பிப். 13–

ராமநாதபுரம் மாவட்ட அரண்மனையில் தமிழ்நாடு அரசு இ–சேவை தமிழ்நாடு தரவு உள்ளிட்டாளர்கள் சங்கத்தினர் இன்று வேலைநிறுத்தம் மற்றும் மறியல் போராட்டத்தில் ஈடுபட்டனர். இ–சேவை மற்றும் ஆதார் சேவை மையங்களில் பணி புரியும் தொழிலாளர்களுக்கு உடனடி ஊதிய உயர்வு வழங்க வேண்டும், முறையான ஊதிய சீட்டு



வழங்க வேண்டும், பல ஆண்டுகளாக ஒப்பந்த அடிப்படையில் பணியாற்றி வரும் பணியாளர்களை பணி நிரந்தரம் செய்ய வேண்டும் உள்ளிட்ட ஏழு அம்ச கோரிக்கை களை வலியுறுத்தி இந்த போராட்டம் நடத்தப்பட்டது. மாவட்டம் முழுவதும் உள்ள பல்வேறு இ–சேவை மற்றும் ஆதார் மையங்களில் பணியாற்றும் தொழிலாளர்கள் அரண்மனை முன்பு திரண்டு கோஷங்கள் எழுப்பினர். குறைந்த ஊதியத்தில் அதிக பணிச்சுமையுடன் பணியாற்ற வேண்டிய நிலை நிலவுகிறது என்றும், சமூகப் பாதுகாப்பு மற்றும் பிற நலன்கள் கிடைக்க முறையான ஊதிய பதிவுகள் அவசியம் என்றும் அவர்கள் தெரிவித்தனர்.



பழனியில், தாலுகா அலுவலகம் முன்பு, மதசார்பற்ற முற்போக்கு கூட்டணி கட்சி சார்பில், மத்திய அரசை கண்டித்து ஆர்ப்பாட்டம் நடைபெற்றது. இந்நிகழ்ச்சியில் திமுக பழனி நகர செயலாளர் வேலுமணி, நகர் மன்ற தலைவர் உமா மகேஸ்வரி, துணைத் தலைவர் கந்தசாமி, நகர துணை செயலாளர் சக்திவேல், ஒன்றிய செயலாளர் சாமிநாதன், கவுன்சிலர் சுரேஷ், இந்திரா திருநாவுக்கரசு, மகேஸ்வரி சக்திவேல், காளீஸ்வரி பாஸ்கரன், பத்மிணி முருகானந்தம், விமலபாண்டியன், தீனதயாளன், முன்னாள் நகர் மன்ற துணை தலைவர் எஸ் கே கே ஹக்கீம், ஆயக்குடி பேரூர் செயலாளர் சின்னதுரை, காங்கிரஸ் நகர தலைவர் முத்துவிஜயன், முருகானந்தம், வீரமணி, சாயிராபானு, முகமதுஅலி, மற்றும் கவுன்சிலர்கள், மதசார்பற்ற முற்போக்கு கூட்டணி கட்சி நிர்வாகிகள் என ஏராளமானோர் கலந்து கொண்டனர்.

## நலம் நலமறிய..! மருத்துவ குறிப்புகள்



## மதிய உணவு சாப்பிடும் போது திடீரென வியர்க்கிறதா?



மதிய உணவு சாப்பிடும்போது சிலருக்கு திடீரென வியர்வை ஏற்படுவதை நாம் அடிக்கடி கவனிக்கிறோம். வானிலை குளிர்ச்சியாக இருந்தாலும், உணவு மிகவும் சூடாக இல்லாவிட்டாலும், சிலருக்கு முகம் மற்றும் நெற்றியில் வியர்வை ஏற்படுகிறது. இது பொதுவாக காரமான உணவின் விளைவாக கருதப்படுகிறது. ஆனால் எளிய ரொட்டி, சாதம் அல்லது பருப்பு வகைகளை சாப்பிடும்போது கூட இந்தப் பிரச்சினை ஏற்படுவது பலரை குழப்பத்தில் ஆழ்த்துகிறது. இது ஒரு சாதாரண உடலியல் செயல்முறையா அல்லது ஏதேனும் உடல்நலப் பிரச்சினையின் அறிகுறியா என்பதை மருத்துவக் கண்ணோட்டத்தில் அறிந்து கொள்வது அவசியம்.

**உணவின் போது வியர்த்தல் என்றால் என்ன?**

டெல்லி எய்ம்ஸின் மருத்துவர் டாக்டர் ஹிமான்ஷு பதானி இதுகுறித்து பேசிய போது " சாப்பிடும்போது வியர்த்தல் மருத்துவ ரீதியாக சுவையான வியர்வை என்று அழைக்கப்படுகிறது. பொதுவாக, நீங்கள் காரமான, உப்பு அல்லது மிகவும் சூடான உணவை சாப்பிடும்போது, உங்கள் உடல் வெப்பநிலை சற்று உயரத் தொடங்குகிறது. சிலருக்கு இந்த அறிகுறி ஏற்படுவதற்கான வாய்ப்புகள் அதிகம், ஏனெனில் அவர்களின் உடல் வகை சூடாக இருக்கும். பெரும்பாலான சந்தர்ப்பங்களில் இது ஒரு சாதாரண செயல்முறையாக இருந்தாலும், சிலருக்கு இது ஒரு அடிப்படை நோயின் அறிகுறியாக இருக்கலாம். " என்று தெரிவித்தார்..

**நீரிழிவு நோயுடனான உறவு:**

சாப்பிடும்போது அதிகப்படியான வியர்த்தல் சில நேரங்களில் நீரிழிவு நோயின் ஆரம்ப அறிகுறியாக இருக்கலாம் என்று மருத்துவர்கள் எச்சரிக்கின்றனர். நீண்டகால நீரிழிவு நரம்பு மண்டலத்தை சேதப்படுத்தும். இது உடலின் வியர்வை சுரப்பிகளின் செயல்பாட்டில் மாற்றங்களை ஏற்படுத்தக்கூடும், இது உணவின் போது அசாதாரண வியர்வைக்கு வழிவகுக்கும். ஆனால் அனைவருக்கும் நீரிழிவு நோய் இல்லை, மேலும் வேறு காரணங்களும் இருக்கலாம்.

**தைராய்டு மற்றும் ஹார்மோன் மாற்றங்கள்:**

தைராய்டு பிரச்சினைகள், ஹார்மோன் ஏற்றத்தாழ்வுகள் மற்றும் இரத்த அழுத்த ஏற்ற இறக்கங்களும் இந்த வகையான வியர்வையை ஏற்படுத்தும். வேகமான வளர்சிதை மாற்றம் உள்ளவர்களுக்கு, உணவின் போது அதிகரித்த இதயத் துடிப்பு மற்றும் வியர்வை ஏற்பட வாய்ப்புள்ளது. பெண்களில் ஹார்மோன் மாற்றங்களின் போதும் இந்த அறிகுறியைக் காணலாம். குழந்தைகள் காரமான உணவை உண்ணும்போது, அதை ஜீரணிக்க உடல் கடினமாக உழைக்க வேண்டும். இதனால் உடல் வெப்பநிலை உயர்ந்து அதிகமாக வியர்க்கிறது. இருப்பினும், சாதாரண மற்றும் லேசான உணவை உண்ணு ம்போது கூட குழந்தை தொடர்ந்து வியர்த்தால், அதை புறக்கணிக்கக்கூடாது. இதுபோன்ற சந்தர்ப்பங்களில், மருத்துவரை அணுகி சுகாதார பரிசோதனை செய்வது நல்லது.

**ஒரு மருத்துவரை எப்போது பார்க்க வேண்டும்:**

சாப்பிடும்போது வியர்வையுடன் கூடிய விரைவான எடை இழப்பு, விரைவான இதயத் துடிப்பு, தீவிர பலவீனம், தலைச்சுற்றல் போன்ற அறிகுறிகளை நீங்கள் அனுபவித்தால் அது இயல்பானதல்ல. இதுபோன்ற சந்தர்ப்பங்களில், இரத்தப் பரிசோதனை, சர்க்கரை பரிசோதனை மற்றும் தைராய்டு பரிசோதனை செய்வது அவசியம். சரியான நேரத்தில் சிகிச்சை பெற்றால், பிரச்சனையைக் கட்டுப்படுத்தலாம்.

**அதைத் தடுப்பதற்கான எளிய வழிகள் என்ன?**

முதல் படி, அதிக உப்பு மற்றும் காரமான உணவுகளை உட்கொள்வதைக் குறைப்பதாகும். ஒரே நேரத்தில் அதிக உணவை சாப்பிடுவதற்குப் பதிலாக, சிறிய, லேசான உணவை உண்ணுங்கள். ஒரு நாளைக்கு குறைந்தது ஏழு கிளாஸ் தண்ணீர் குடிப்பது உடல் வெப்பநிலையை சமநிலைப்படுத்த உதவுகிறது. மன அழுத்தத்தைக் குறைத்தல், வழக்கமான உடற்பயிற்சி மற்றும் போதுமான தூக்கம் பெறுதல் ஆகியவை இந்தப் பிரச்சினையைக் குறைக்க உதவுகின்றன. எனவே சாப்பிடும்போது வியர்த்தல் என்பது பெரும்பாலான மக்களுக்கு ஒரு சாதாரண செயல்முறையாகும். இருப்பினும், அது தொடர்ந்து மற்றும் அதிகமாக இருந்தால், அது உடலின் எச்சரிக்கை அறிகுறியாக இருக்கலாம். சரியான நேரத்தில் மருத்துவ ஆலோசனையைப் பெறுவதே சிறந்த தீர்வாகும்.

# 'மேட் இன் இந்தியா இது தேஷ் பந்து குப்தா, லூபின் மற்றும் இந்திய ஃபார்மா துறையின் கதை'என்கிற புத்தகம் மும்பையில் வெளியிடப்பட்டது!



(L to R) - Author Sundeep Khanna; Chiki Sarkar, Juggernaut Books; Manju D Gupta, Lupin; Dilip Shanghvi, Sun Pharma; Vinita Gupta, Lupin; Dr. Yusuf Hamied, Cipla; Prof. M. M. Sharma, Ex-(UDCT) ICT; G.V. Prasad, Dr. Reddy's; Nilesh Gupta, Lupin; Author Manish Sabharwal.

சென்னை , பிப். 13–

சந்தீப் கன்னா மற்றும் டீம்லீஸ் சர்வீசஸ் இணை நிறுவனர் மணீஷ் சபர்வால் எழுதிய 'மேட் இன் இந்தியா' புத்தகம், இந்தியாவின் ஃபார்மா துறையின் எழுச்சி, லூபின் நிறுவனத்தின் வளர்ச்சி மற்றும் அதன் நிறுவனர் தேஷ் பந்து குப்தா (DBG) அவர்களின் அதிசய மான வாழ்க்கைப் பயணத்தை வெளிப்படுத்துகிறது. ராஜஸ்தானில் இருந்து வந்த ஒரு சாதாரண கிராமப்புற சிறுவன், ஆசிரியர் மற்றும் மருந்து ஊழியராக தொடங்கி, பின்னர் உலகின் முன்னணி ஜெனரிக்ஸ் நிறுவனங்களில் ஒன்றை உருவாக்கிய தொழில்முனைவோராக உயர்ந்த கதை இதன் மையமாகும். எந்த வசதியும் ஆதரவுமின்றி தைரியம், தன்னம்பிக்கை மற்றும் தொலைநோக்குப் பார்வையால் லூபினை 120 நாடுகளில் உயிர்காக்கும் மருந்துகள் வழங்கும் மல்ட்டி–பில்லியன் டாலர் நிறுவனமாக மாற்றிய விதம் புத்தகத்தில் வலியுறுத்த ப்படுகிறது.

இந்தியா இன்று "உலகின் மருந்தகம்" என அழைக்க ப்படுவதற்கான பின்னணி யையும் புத்தகம் விளக்கு கிறது. அமெரிக்கர்கள் உட்கொள்ளும் மாத்திரை களில் கிட்டத்தட்ட பாதி இந்தியாவில் தயாரிக்க ப்படுகின்றன; உலக தடுப்பூசிகளில் 60% இந்தியாவில் உற்பத்தியாகின்றன. டாக்டர் யூசுப் ஹமீத் (சிப்லா), அஞ்சி ரெட்டி (டாக்டர் ரெட்டிஸ்), பர்விந்தர் சிங் (ரான்பாக்சி), திலீப் ஷாங்வி (சன் பார்மா), ரமன்பாய் படேல் (ஜைடஸ்–காடிலா), ஹபீல் கோரா க்கிவாலா (வோக்ஹார்ட்) மற்றும் DBG (லூபின்) ஆகிய முன்னோடிகள் இந்தியாவின் ஃபார்மா துறையை உலக அரங்கில் நிலைநிறுத்திய முக்கிய ஆளுமைகள் என குறிப்பிடப்ப டுகின்றனர். லூபின் வளர்ச்சியில் மஞ்சு குப்தா அவர்களின் பங்களிப்பையும் புத்தகம் கவனத்தில் கொண்டுள்ளது. புத்தக வெளியீட்டு நிகழ்வில் திலீப் ஷாங்வி, டாக்டர் யூசுப் ஹமீத், G.V. பிரசாத் (டாக்டர் ரெட்டிஸ்), வினிதா குப்தா (லூபின்) மற்றும் பேராசிரியர் M.M. ஷர்மா (ICT, முன்னாள் UDCT) உள்ளிட்டோர் கலந்து கொண்டு தலைமைத்துவம் மற்றும் தேச நிர்மாணத்தில் இந்திய மருந்துத் துறையின் பங்கு குறித்து பகிர்ந்துகொண்டனர். உறுதி, நோக்கம் மற்றும் சேவை மனப்பான்மையால் உலக தரத்தை அடைந்த ஒரு இந்திய கனவின் ஊக்கமான கதைதான் 'மேட் இன் இந்தியா'.

# Q3 FY26-ல் சந்தை முன்னிலை தொடரும் LG Electronics India; ஏற்றுமதி விரிவாக்கத்துக்கு தீவிரம்!

கோயம்புத்தூர், பிப். 13–

இந்தியாவின் முன்னணி நுகர்வோர் மின்னணு நிறுவனமான LG Electronics India Limited (LGE India), FY26–ன் மூன்றாவது காலாண்டு (Q3) முடிவுகளை அறிவித்துள்ளது.

இக் காலாண்டில் நிறுவனம் ₹41.14 பில்லியன் செயல்பாட்டு வருவாயை பதிவு செய்துள்ளது; EBITDA லாப விகிதம் 4.8% ஆக உள்ளது. பண்டிகைக்குப்பிந்தைய தேவை குறைந்திருந்த போதிலும், வீட்டு உபயோகப் பொருட்கள் மற்றும் ஹோம் என்டர்டெயின்மென்ட் உள்ளிட்ட முக்கிய பிரிவுகளில் நிறுவனம் தனது #1 சந்தை முன்னிலையில் தொடர்ந்து தக்க வைத்துள்ளது.

முடிவுகள் குறித்து கருத்து தெரிவித்த திரு. Hong Ju Jeon, நிர்வாக இயக்குநர் மற்றும் தலைமை விற்பனை & சந்தைப்படுத்தல் அதிகாரி, LG Electronics India, "வெளிப்புற சவால்கள் இருந்தபோதிலும், முக்கிய B2C பிரிவுகளில் நாங்கள் முன்னிலையில் உள்ளோம். புதிய BEE மதிப்பீடு செய்யப்பட்ட தயாரிப்புகளுக்கு கிடைத்த நல்ல வரவேற்பால் Q4–ஐ நம்பிக்கையுடன் எதிர்கொள்கிறோம். கோடைக்கால தேவையை முன்னிட்டு, பிரீமியம் மற்றும் 'LG Essential' வரிசைகளை விரிவுபடுத்தும் இரட்டை உத்தியை செயல்படுத்துகிறோம். மேலும், AMC மற்றும் B2B துறைகளிலும் வளர்ச்சியை வலுப்படுத்துவோம்," என்றார். அடுத்த கட்டமாக, அமெரிக்க வரி தளர்வுகள் மற்றும் EU FTA வாய்ப்புகளை பயன்படுத்தி 'Make in India' பிரீமியம் தயாரிப்புகளின் ஏற்றுமதியை அதிகரிக்க நிறுவனம் திட்டமிட்டுள்ளது. அமெரிக்கா மற்றும் ஐரோப்பா உள்ளிட்ட சந்தைகளை இலக்காகக் கொண்டு அடுத்த நிதியா ண்டில் ஏற்றுமதியை இரட்டிப்பாக்கும் நோக்கமும் அறிவிக்கப்பட்டுள்ளது.

அதேசமயம், Sri City–யில் மூன்றாவது உற்பத்தி ஆலையை செயல்படுத்தி உள்ள மயமாக்கலை மேம்படுத்தவும் நிறுவனம் கவனம் செலுத்துகிறது.

# எக்ஸ்பிரஸ் அவென்யூவில் இரண்டாவது விற்பனையகத்தை தொடங்கிய நியூ பேலன்ஸ்




சென்னை, பிப். 13–

உலகளாவிய விளையாட்டு மற்றும் வாழ்க்கை முறை பிராண்டான நியூ பேலன்ஸ், சென்னையின் எக்ஸ்பிரஸ் அவென்யூ மால் தனது இரண்டாவது விற்பனையகத்தை திறந்து நகரில் விரிவடைந்துள்ளது. கைவினைத்திறன், செயல்திறன் மற்றும் வடிவமைப்பு ஒருங்கிணைக்கும் இந்த புதிய கடை, பாரம்பரிய ஷாப்பிங்கை தாண்டி சமூகத்துடன் இணையும் அனுபவத்தை வழங்கும் வகையில் வடிவமைக்கப்பட்டுள்ளது. தொடக்க விழாவில் நடிகை மாளவிகா மோகனன் உட்பட கலாச்சாரம், ஃபேஷன் மற்றும் உடற்பயிற்சி துறையினரின் பங்கேற்பு சிறப்பாக அமைந்தது.

தொடக்கத்தை தொடர்ந்து நடைபெற்ற சமூக ஓட்டத்தில் 100–க்கும் மேற்பட்ட ஓட்டப்பந்தய வீரர்கள் கலந்து கொண்டு புதிதாக அறிமுகமான 1080v15 ஷூவை அனுபவித்தனர். இந்த நிகழ்வு பிராண்டின் சமூக மையப்படுத்தப்பட்ட அணுகுமுறையையும், செயல்திறன் மற்றும் வாழ்க்கை முறை இணையும் தத்துவத்தையும் வெளிப்படுத்தியது. ரதேஷ்வர் தாவர், நியூ பேலன்ஸ் இந்திய பிரிவு மேலாளர், கூறுகையில், "கடந்த இரண்டு ஆண்டுகளில் இந்தியாவில் கிடைத்த வரவேற்பு மிகவும் உற்சாகமளிக்கும். 2026–இல் எங்கள் சில்லறை விரிவாக்கத்தை மேலும் வேகப்படுத்த உள்ளோம். தென்னிந்திய, குறிப்பாக சென்னை, தரம் மற்றும் வடிவமைப்பை மதிக்கும் சந்தையாக திகழ்கிறது. எக்ஸ்பிரஸ் அவென்யூவில் உள்ள புதிய விற்பனை மையம் சமூக மையப்படுத்தப்பட்ட உயர்தர அனுபவத்தை வழங்கும்," என்றார்.

# TCI 2026 நிதியாண்டு மூன்றாம் காலாண்டில் வலுவான வளர்ச்சி பதிவு!



சென்னை, பிப். 13–

இந்தியாவின் முன்னணி ஒருங்கிணைந்த பன்முக போக்குவரத்து மற்றும் விநியோக சங்கிலி தீர்வுகள் வழங்குநர் டிரான்ஸ்போர்ட் கார்ப்பரேஷன் ஆஃப் இந்தியா லிமிடெட் (TCI), 2025 டிசம்பர் 31 அன்று முடிவடைந்த 2026 நிதியாண்டின் மூன்றாம் காலாண்டு மற்றும் ஒன்பது மாதங்களுக்கு நிதி முடிவுகளை அறிவித்துள்ளது. மாற்றமிக்க சந்தை சூழலும் நிறுவனம் நிலையான செயல்திறனை பதிவு செய்துள்ளது.

Q3FY2026 செயல்திறன் குறித்து TCI நிறுவனத்தின் நிர்வாக இயக்குநர் திரு. வினீத் அகர்வால் தெரிவித்ததாவது: பண்டிகை கால தேவையால் FMCG மற்றும் MSME சார்ந்த ஒருங்கிணைந்த லாஜிஸ்டிக்ஸ் தீர்வுகளில் முன்னேற்றம் காணப்பட்டது. GST 2.0 அமலாக்கத்தின் ஆரம்ப சவால்களுக்கு பின்னர் கிடைத்த தெளிவு சரக்கு இயக்கத்தை வேகப்படுத்தியது. ஆட்டோமொபைல், நுகர்வோர் நீடித்த பொருட்கள், மருந்துகள் மற்றும் ஈ–காமர்ஸ் துறைகள் முக்கிய வளர்ச்சி இயக்கிகள் இருந்த; சாலை மற்றும் ரெயில் போக்குவரத்து அளவுகள் மற்றும் கிடங்கு பயன்பாடு அதிகரித்தது. ரெயில், கடலோர மற்றும் நெட்வொர்க் சார்ந்த லாஜிஸ்டிக்ஸ் சேவைகள் விரிவுபடுத்தியது டன், கிடங்கு வசதிகள் மற்றும் மதிப்புக் கூட்டப்பட்ட சேவைகளிலும் TCI தொடர்ந்து முதலீடு செய்துள்ளது. பண்டிகை காலத்திற்குப் பிறகு சரக்கு அளவுகள் இயல்புநிலைக்கு திரும்பும் என எதிர்பார்த்தாலும், MSME துறையின் நம்பிக்கை, Tier 2 மற்றும் Tier 3 நகரங்களில் அதிகரிக்கும் நுகர்வு, கட்டமைப்பு முதலீடுகள் மற்றும் சுதந்திர வர்த்தக ஒப்பந்தங்களின் உருவாகும் வாய்ப்புகள் நடுக்கால வளர்ச்சிக்கு வலுவான ஆதாரமாக இருக்கும் என நிறுவனம் தெரிவித்துள்ளது.

**TAMIL NADU CIVIL SUPPLIES CORPORATION**
Office of the Regional Manager,
Region: Ramanathapuram
Ph.No. 09442330767 Email id.: tncscrmd@nic.in & tncscrmd@gmail.com CIN: U15137TN1972SGC006157

**E-TENDER NOTICE**

No. B1/00469/2025, Dated: 13/02/2026,

Appointment of Transport contractors for transportation of PTMGRNMP, ICDS, Hon'ble Chief Minister Break–Fast Scheme and other Government Schemes within the region as entrusted by Tamil Nadu Civil Supplies Corporation as specified in the nature of work for the period for two years.

(NOT TRANSFERABLE)

Complete e–tender document can be viewed and downloaded through www.tntenders.gov.in/nicgep/app

The bidders have to participate online bidding only with Digital Signature Certificate (DSC) of Class–III

Last Date & Time for Submission of Bid : 26/02/2026, –11.00 AM
Date & Time of Opening of Bid : 27/02/2026, 11.30 AM
Date & Time of Pre–Bid Meeting : 18/02/2026, at 11.00 AM in the Office of Regional Manager, TNCSC, Ramanathapuram Region.
Earnest Money Deposit : Rs.50,000/– (Rupees Fifty Thousand only) Payment of EMD by online

**RM, TNCSC**
Ramanathapuram Region.

வெ.ஆ.எண்: 06/2026/ செ.ம.தொ.அ/ இராமநாதபுரம் நாள்: 12.02.26.

"சோதனை கடந்து சுதந்திரம் அடைந்தோம்" "சாதனை புரிந்து சரித்திரம் படைப்போம்"



**இஸ்மாயில் லக்கி டிராவல்ஸ்**
127, T.P.K.ரோடு, மதுரை.
Ph: 98659 88882
மதுரை to சென்னை ரெகுலர் சர்வீஸ் பஸ் மற்றும் பார்சல் சர்வீஸ் உள்ளது
சென்னை Ph: 98659 88881


## வேலை வாய்ப்பு

### தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கம்: 201 காலியிடங்கள்




Organization Name: Tamil Nadu State Rural Livelihood Mission.
Job Category: Tamilnadu Govt Jobs
Employment Type: Contract Basis
No of Openings: 201 Block Coordinator Posts
Place of Posting: Tamilnadu
Starting Date: 06.02.2026
Last Date: 16.02.2026
Apply Mode: Offline
Official Website: https://tndistricts.nic.in/

## சினிமா துளிகள்..!



### இது தான் வெற்றியா?... அப்பாவின் அந்த சிரிப்பை வாழ்க்கையில் மறக்கவே முடியாது – சவுந்தர்யா!



சவுந்தர்யா ரஜினிகாந்த் தயாரித்து மதன் இயக்கத்தில் அபிஷன் ஜீவிந்த், அனஸ்வரா ராஜன் நடிப்பில் சமீபத்தில் வெளியான படம், 'வித் லவ். இந்த படம் ரசிகர்களிடையே வரவேற்பை பெற்று வரும் நிலையில், படத்தின் வெற்றியை படக்குழுவினர் கொண்டாடினார்கள்.

இதில் தயாரிப்பாளர் சவுந்தர்யா ரஜினிகாந்த் பேசும்போது, 'வித் லவ்' படத்துக்கு ரசிகர்கள் தரப்பில் நல்ல வரவேற்பு கிடைத்து வருகிறது.

அந்த சந்தோஷத்துடன் படக்குழுவை அழைத்துக்கொண்டு என் அப்பாவை (ரஜினிகாந்த்) பார்க்க சென்றேன். என் அப்பா என்னை கட்டிப் பிடித்து, என்னை பார்த்து ஒருமாதிரியாக சிரித்தார். அப்போது நான் கேட்டேன். 'அப்பா இது தான் வெற்றியா?" என்று...

அப்பாவின் அந்த சிரிப்பை என்னால் வாழ்க்கையில் மறக்கவே முடியாது. 18 ஆண்டு திரைப்பயணத்தில் நான் அடைந்த முதல் வெற்றி இது. 'வித் லவ்' படக்குழுவால் தான் அது அமைந்தது. அனஸ்வரா ராஜனை பார்த்து, 'இத்தனை நாள் எங்கங்க இருந்தீங்க...' என்று அப்பா ஆச்சரியத்துடன் கேட்டார். அபிஷனையும் பாராட்டி தீர்த்துவிட்டார். இந்த குழு மீண்டும் இணைந்தாலும் நான் ரெடி. ஒகே சொல்லட்டும். பட்டறையை போட்டுடலாம், என்றார்.

# நாசிக்கில் ஜெனரல் மில்ஸ் இந்தியா புதிய உற்பத்தி ஆலையை திறந்தது!



சென்னை, பிப். 13–

அமெரிக்காவைத் தலைமையிடமாகக் கொண்ட பார்ச்சூன் 500 உணவு நிறுவனமான ஜெனரல் மில்ஸ் இன்கார்ப்பரேஷன் ஒரு பகுதியாக செயல்படும் ஜெனரல் மில்ஸ் இந்தியா, மகாராஷ்டிராவின் நாசிக்கில் புதிய அதிநவீன உற்பத்தி ஆலையை திறந்துள்ளது. சுமார் ரூ.100 கோடி முதலீட்டில் அமைக்கப்பட்டுள்ள இந்த ஆலை, இந்தியாவில் நிறுவனத்தின் உற்பத்தி தடத்தை விரிவுபடுத்துவதன், வேகமாக வளர்ந்து வரும் உணவு மற்றும் பேக்கரி துறைக்கான நீண்டகால அர்ப்பணிப்பை வலுப்படுத்துகிறது.

இந்த புதிய உற்பத்தி மையம் பில்ஸ்பரி தயாரிப்புகளின் கிடைக்கும் தன்மையை நாடு முழுவதும் அதிகரித்து, விநியோகச் சங்கிலி திறனை மேம்படுத்தும் என நிறுவனம் தெரிவித்துள்ளது. இதன் மூலம் ஆயிரக்கணக்கான பேக்கரிகளில் நிலையான தரமான தயாரிப்புகள் எளிதாக கிடைக்க வழிவகுக்கும். மேலும், இந்த ஆலை உற்பத்தி, தளவாடங்கள் மற்றும் ஆதரவு சேவைகள் துறைகளில் பல நேரடி மற்றும் மறைமுக வேலைவாய்ப்புகளை உருவாக்கி, நாசிக் பிராந்தியத்தின் பொருளாதார வளர்ச்சிக்கும் உள்ளூர் சப்ளையர்கள் முன்னேற்றத்துக்கும் ஆதரவாக இருக்கும். "நாசிக்கில் எங்கள் புதிய ஆலை திறக்கப்பட்டதன் மூலம் பில்ஸ்பரி தயாரிப்புகளின் அணுகலை நாடு முழுவதும் விரிவுபடுத்துவதில் பெருமை கொள்கிறோம்," என்று ஜெனரல் மில்ஸ் உலகளாவிய வளர்ந்து வரும் சந்தைகளின் துணைத் தலைவர் மற்றும் நிர்வாக இயக்குநர் பால்கி ராதாகிருஷ்ணன் தெரிவித்தார்.

1999 முதல் இந்தியாவில் பில்ஸ்பரி பிராண்ட் தரமான பேக்கிங் தயாரிப்புகளை வழங்கி வருவதாக குறிப்பி ட்ட அவர், இந்த விரிவாக்கம் நுகர்வோர் மற்றும் பேக்கரி கூட்டாளிகளுக்கு மேலும் சிறப்பாக சேவை செய்ய உதவும் என்றார்.




# மீண்டும் குறைந்த தங்கம், வெள்ளி விலை!



சென்னை, பிப். 13–

சென்னையில் இன்று 22 கேரட் ஆபரணத் தங்கத்தின் விலை சவரனுக்கு ரூ.1,600 குறைந்து ரூ.1,15,200–க்கு விற்பனை செய்யப்படுகிறது. தங்கம் விலை கிராமுக்கு ரூ.200 குறைந்து ரூ.14,400–க்கு விற்பனை செய்யப்படுகிறது. வெள்ளி விலையும் இன்று குறைந்துள்ளது. வெள்ளி விலை கிராமுக்கு ரூ.20 குறைந்து ஒரு கிராம் வெள்ளி ரூ.280–க்கும், பார் வெள்ளி 2 லட்சத்து 80 ஆயிரம் ரூபாய்க்கும் விற்பனை செய்யப்படுகிறது.

# தமிழக சட்டமன்ற தேர்தல்: கலெக்டர்கள், போலீஸ் அதிகாரிகளுடன் தேர்தல் கமிஷன் குழு ஆலோசனை!

சென்னை, பிப். 13–

தமிழகத்தில் நடக்கும் எஸ்.ஐ.ஆர். பணிகளை மதிப்பீடு செய்யவும், சட்டமன்ற தேர்தலுக்கான முன்னேற்பாடுகள் பற்றியும் ஆய்வு செய்வதற்கும் இந்திய தேர்தல் கமிஷனில் இருந்து துணை கமிஷனர்கள் சென்னைக்கு வந்துள்ளனர். புதுச்சேரியில் நேற்று முன்தினம் ஆய்வுப் பணியை முடித்துள்ள அவர்கள் தமிழகத்தில் 2 நாட்கள் ஆய்வுக் கூட் டத்தை நடத்துகின்றனர்.




அதன்படி சென்னை எம்.ஆர்.சி. நகரில் உள்ள நட்சத்திர ஓட்டலில் நேற்று துணை தேர்தல் கமிஷனர்கள் மானேஷ் கார்க், பானு பிரகாஷ், பவன்குமார் சர்மா, சஞ்சய்குமார், ஆசிஷ் கோயல் உள்பட 7 பேர் கொண்ட குழுவினர் ஆய்வுக்கூட்டத்தை மேற்கொண்டனர். முதலில் தலைமை தேர்தல் அதிகாரி அர்ச்சனா பட்நாயக் மற்றும் தமிழகத்தில் உள்ள தேர்தல் அதிகாரிகளுடன் ஆலோசனை மேற்கொள்ளப்பட்டது. அதைத்தொடர்ந்து தேர்தல் பணியில் ஈடுபட உள்ள வருமான வரித்துறை, சுங்கத்துறை, காவல்துறை, ரெயில்வே, துணை ராணுவம், அஞ்சல், சிவில் விமான போக்குவரத்துறை உள்ளிட்ட 20–க்கும் மேற்பட்ட துறையின் ஒருங்கிணைப்பு அலுவலர்களுடன் ஆலோசனை மேற்கொண்டனர். இதில் தேர்தல் முன்னேற்பாடுகள், ஆயத்த பணிகள் பற்றி விரிவான ஆய்வு மேற்கொள்ளப்பட்டது.

இந்த நிலையில், இன்று காலை அனைத்து மாவட்ட தேர்தல் அதிகாரிகளுடன் (கலெக்டர்கள்) இந்தக்குழு ஆலோசனை மேற்கொள்கிறது. அதைத்தொடர்ந்து மாவட்ட போலீஸ் சூப்பிரண்டுகளுடன் ஆலோசனை மேற்கொள்ளப்படுகிறது. அப்போது சட்டம் ஒழுங்கு பிரச்சினைகள், கலவரம் ஏற்படக்கூடிய வாக்குச்சாவடிகள், அங்கு மேற்கொள்ள இருக்கும் தடுப்பு நடவடிக்கைகள், வாக்குச்சாவடி முழுவதும் மேற்கொள்ளப்பட வேண்டிய கண்காணிப்புப் பணிகள்,

அடிப்படை வசதிகள், பாதுகாப்பு ஏற்பாடுகள், கண்காணிப்பு கேமரா வசதிகள், வாக்குப்பதிவு நேரடி ஒளிபரப்பு வசதிகள், கட்டுப்பாட்டு அறை அமைத்தல், வாக்காளர்களுக்கு தேவையான கழிவறை, குடிநீர் வசதிகள், வயதான மற்றும் மாற்றுத்திறனாளி வாக்காளர்கள் வந்து வாக்களிக்க வசதியாக செய்யப்பட வேண்டிய சாய்தளம், சக்கர நாற்காலி உள்ளிட்ட வசதிகள் பற்றி ஆய்வுகள் மேற்கொள்ளப்படுகிறது. இன்று ஆலோசனைக்கூட்டம் முடிவுற்றதும் மாலையில் துணை கமிஷனர்கள் குழு டெல்லி செல்வதாக தெரிகிறது. தமிழகம் மற்றும் புதுச்சேரியில் உள்ள தேர்தல் முன்னேற்பாடுகள் பற்றி இந்தக் குழு அறிக்கை அளித்த பிறகு தலைமை தேர்தல் கமிஷனர் தலைமையிலான குழு தமிழகத்திற்கு வந்து ஆய்வுகளை மேற்கொள்ளும். அப்போது அரசியல் கட்சி பிரதிநிதிகளையும் அழைத்து பேசுவார்கள்.

# பரபரக்கும் அரசியல் களம்: அமைச்சர்கள் தொகுதிகளை குறிவைக்கும் கம்யூனிஸ்டு கட்சிகள்!

சென்னை, பிப். 13–

தமிழக சட்டமன்றத்துக்கு ஏப்ரல்–மே மாதங்களில் தேர்தல் நடைபெற உள்ள நிலையில், தி.மு.க. கூட்டணியில் இடம்பெற்றுள்ள சில கட்சிகள் கடந்த முறையை விட கூடுதல் இடங்கள் கேட்டு குடைச்சல் கொடுத்து வருகின்றன. தி.மு.க. கூட்டணியில் தொகுதி பங்கீடு தொடர்பான




பேச்சுவார்த்தை வருகிற 22–ந்தேதி தொடங்க உள்ளது. இந்த நிலையில் திருச்சியில் தி.மு.க. அமைச்சர்கள் போட்டியிட்டு வென்ற திருச்சி மேற்கு, திருவெறும்பூர் ஆகிய தொகுதிகளை குறி வைத்து அங்கு தங்களது கட்சி போட்டியிட்டால் வெற்றி பெறலாம் என்று தீர்மானம் நிறைவேற்றி கட்சி தலைமைக்கு இந்திய கம்யூனிஸ்டு கட்சி நிர்வாகிகள் கடிதம் அனுப்பி உள்ளனர்.

திருச்சி மாநகர் மாவட்ட இந்திய கம்யூனிஸ்டு கட்சியின் மாவட்டக்குழு கூட்டத்தில் திருச்சி மேற்கு, ஸ்ரீரங்கம், திருச்சி கிழக்கு ஆகிய தொகுதி களில் ஒன்றை இந்த முறை தி.மு.க.விடம் கேட்டுப்பெற வேண்டும் என் றும், இதில் ஒன்றில் போட்டியிட வாய்ப்பு கிடைத்தால் நிச்சயமாக வெற்றி பெறுவோம் என்றும் தெரிவித்துள்ளனர்.

இதேபோன்று கூட்டணியில் அங்கம் வகித்துள்ள மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்டு மற்றும் இந்திய கம்யூனிஸ்டு கட்சியின் புறநகர் மாவட்ட குழு கூட்டத்தில் திருவெறும்பூர், மணப்பாறை தொகுதிகளை கேட்டு தீர்மானம் நிறைவேற்றி மாநில குழுவுக்கு அனுப்பி உள்ளனர். இதில் திருச்சி மேற்கு தொகுதி, தி.மு.க. முதன்மைச் செயலாளரும் அமைச்சருமான கே.என்.நேரு தொகுதியாகும். அவர் மீண்டும் இந்த தொகுதியில் போட்டியிடுவதற்கான ஆயத்த பணிகளை தொடங்கிவிட்டார். அதேபோன்று அமைச்சர் அன்பில் மகேஷ் பொய்யாமொழி மீண்டும் திருவெறும்பூர் தொகுதியில் போட்டியிடுவது உறுதியாகி உள்ளது. அவரும் தேர்தலுக்கான பூர்வாங்க பணிகளை தொடங்கி விட்டார்.

இந்த நிலையில் இரண்டு கம்யூனிஸ்டுகளும் அமைச்சர்கள் வென்ற தொகுதிகளை குறிவைத்து தீர்மானம் நிறைவேற்றியுள்ளது திருச்சி அரசியல் களத்தில் பரபரப்பை ஏற்படுத்தி உள்ளது. இதுதொடர்பாக திருச்சி மாவட்ட கம்யூனிஸ்டு நிர்வாகிகளிடம் கேட்ட போது, 'நாங்கள் விருப்பம் தெரிவித்துள்ள அமைச்சர்களின் தொகுதிகள் இரண்டிலும் ஏற்கனவே எங்கள் கட்சிகளின் தலைவர்கள் கடந்த தேர்தல்களில் போட்டியிட்டு வெற்றி பெற்றுள்ளனர்.

அந்த இரண்டு தொகுதிகளிலுமே கிளை அமைப்பு வரை எங்களது கட்சி வலுவாக உள்ளது. அரசியலில் எதுவும் சாத்தியம்தான். நாங்கள் வலிமையாக உள்ள, வெற்றி பெற வாய்ப்புள்ள தொகுதிகள் என்று குறிப்பிட்டு திருச்சி மேற்கு மற்றும் திருவெறும்பூரை கேட்டுள்ளோம். அமைச்சர்கள் தொகுதிகள் என்பதால் கேட்கவில்லை. என்றனர்.

# வளர்ப்பு நாய்களுக்கு உரிமம் பெற்று விட்டீர்களா? - வீடு வீடாக ஆய்வு நடத்த வரும் மாநகராட்சி ஊழியர்கள்!

சென்னை, பிப். 13–

சென்னை மாநகராட்சி கால்நடை பிரிவு அதிகாரி



ஒருவர் கூறியதாவது:–

சென்னை மாநகராட்சியில் மொத்தம் 1 லட்சத்து 80 ஆயிரம் தெரு நாய்கள் இருப்பதாக கடந்த 2024–ம் ஆண்டில் கணக்கெடுக்கப்பட்டுள்ளது. அவற்றில் 1 லட்சத்து 47 ஆயிரம் தெரு நாய்களுக்கு ரேபீஸ் தடுப்பூசி செலுத்தப்பட்டுள்ளது. அவற்றில் 16 ஆயிரத்து 611 தெரு நாய்களுக்கு தடுப்பூசியுடன், கருத்தடை சிகிச்சையும் அளிக்கப்பட்டு, கண்காணிக்க மைக்ரோசிப்பும் பொருத்தப்பட்டுள்ளது.

மாநகராட்சியில் சுமார் 1 லட்சத்துக்கும் மேற்பட்ட வளர்ப்பு நாய்கள் உள்ளதாக தெரியவந்துள்ளது. ஆனால், தற்போது வரையில் 74 ஆயிரம் வளர்ப்பு நாய்களுக்கு மட்டுமே அவற்றின் உரிமையாளர்கள் உரிமம் பெற்றும், ரேபீஸ் தடுப்பூசியும், மைக்ரோசிப்பும் பொருத்தி உள்ளனர்.

அடுத்த வாரத்தில் வளர்ப்பு நாய்கள் உள்ள வீடுகள் தோறும் சென்று அவற்றுக்கு உரிமம் பெறாதவர்களுக்கு தலா ரூ.5 ஆயிரம் அபராதம் விதிக்கப்பட உள்ளது. எனவே, அதற்குள் சம்பந்தப்பட்டோர் உரிமம் பெறவேண்டும்.

இவ்வாறு அவர் கூறினார்.

# ரூ.5,000 முன்பே வரவு வைக்கப்பட்டது ஏன்? - தமிழக அரசு விளக்கம்!

சென்னை, பிப். 13–

மகளிர் உரிமை தொகை பெறுவோருக்கு இன்று காலையிலேயே அவரவர் வங்கி கணக்கில் 5,000




ரூபாய் வரவு வைக்கப்பட்டதால் இல்லத்தரசிகள் செம குஷியில் துள்ளிக்குதித்து வருகின்றனர். கோடைகாலத்திற்கு சுற்றுலா சென்று வர இப்போதே கணக்குபோட்டுவிட்டனர். ஒரு சில இல்லத்தரசிகள் கோடை காலத்திற்கு தேவையான பொருட்களை வாங்கி வைத்து கொள்ள வேண்டும் என்று கூறி வருகின்றனர். இந்தநிலையில், ரூ.5,000 முன்பே வரவு வைக்கப்பட்டது ஏன்? என்பது குறித்து அரசுதரப்பில் விளக்கம் அளிக்கப்பட்டுள்ளது.

அதில், * மே மாதம் வரை மட்டுமே இந்த ஆட்சிக்கான அதிகாரம் என்பதால் அடுத்த 3 மாதங்களுக்கு வரவு வைக்கப்பட்டுள்ளது.

* இலவசங்கள் தொடர்பான வழக்கு மார்ச் மாதம் முதல் வாரத்தில் விசாரணைக்கு வருவதால் முன்கூட்டியே வரவு வைக்கப்பட்டுள்ளது.

* பிப். 15 ஆம் தேதி ஞாயிறு என்பதாலும், பிப்.14 ஆம் தேதி இரண்டாவது சனிக்கிழமை என்பதாலும் பிப்.13 ஆம் தேதியே ரூ.5,000 வரவுவைக்கப்பட்டுள்ளது.

இவ்வாறு அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# வங்கதேச தேர்தல்: பி.என்.பி. கட்சி அமோக வெற்றி!

டாக்கா, பிப். 13–

வங்கதேசத்தில் கடந்த 2024ம் ஆண்டு நடந்த மாணவர் போராட்டத்தால் பிரதமர் பதவியை ராஜினாமா செய்துவிட்டு ஷேக் ஹசீனா இந்தியாவில் தஞ்சமடைந்தார். இதனால் நோபல் பரிசு பெற்ற முகமது யூனுஸ் தலைமையிலான இடைக்கால அரசு பொறுப்பேற்றது. சுமார் 18 மாதத்துக்கு பிறகு நேற்று அங்கு தேர்தல் நடத்தப்பட்டது. முன்னாள் பிரதமர் ஷேக் ஹசீனா மீதான வழக்குகள் நிலுவையில் உள்ள நிலையில், அவரது அவாமி லீக் கட்சிக்கு தேர்தலில் போட்டியிட தடை விதிக்கப்பட்டது.



இதையடுத்து, தாரிக் ரஹ்மான் தலைமையிலான வங்கதேச தேசியவாத கட்சி (பிஎன்பி), அதன் முன்னாள் கூட்டாளியான ஜமாத்–இ–இஸ்லாமி ஆகிய கட்சிகளுக்கு இடையே நேரடி போட்டி நடந்தது. வங்கதேச நாடாளுமன்றத்தில் மொத்தமுள்ள 300 தொகுதியில் ஒரு தொகுதியில் வேட்பாளர் மறைவால் மீதமுள்ள 299 தொகுதிகளில் நேற்று தேர்தல் நடந்தது. இதில் 50 அரசியல் கட்சிகளைச் சேர்ந்த 1,755 வேட்பாளர்கள், 273 சுயேட்சைகள் போட்டியிட்டனர். நாடு முழுவதும் உள்ள 42,779 வாக்குச்சாவடிகளில் நேற்று காலை 7.30 மணிக்கு வாக்குப்பதிவு தொடங்கியது. 8 லட்சம் ஊழியர்கள் தேர்தல் பணியில் ஈடுபட்டனர். 9 லட்சம் பாதுகாப்பு வீரர்கள் பணியில் ஈடுபட்டனர். இடைக்கால அரசின் தலைவர் முகமது யூனுஸ், பி.என்.பி தலைவர் தாரிக் ரஹ்மான் ஆகியோர் முன்கூட்டியே வாக்குப்பதிவு செய்தனர். வங்கதேச தேசியவாதக் கட்சியின் தலைவர் தாரிக் ரஹ்மான், டாக்காவின் உயர்மட்ட குல்ஷன் பகுதியில் உள்ள குல்ஷன் மாதிரி பள்ளி மற்றும் கல்லூரி மையத்தில் வாக்களித்தார்.

இந்நிலையில், வாக்குப்பதிவு முடிந்ததும் வாக்கு எண்ணிக்கை தொடங்கியது. தொடக்கத்தில் பி.என்.பி. கட்சிக்கும், ஜமாத்–இ–இஸ்லாமி கட்சிக்கும் இடையே கடும் போட்டி ஏற்பட்டது.

நேரம் செல்ல செல்ல பி.என்.பி. கட்சி பல்வேறு இடங்களில் வெற்றி பெற்றது. அதன்பின் பெரும்பான்மைக்குத் தேவையான இடங்களைவிட அதிக தொகுதிகளில் பி.என்.பி. கட்சி அமோக வெற்றி பெற்றது என உள்ளூர் செய்தி ஊடகங்கள் தெரிவித்தன. 150 தொகுதிகளுக்கும் அதிகமான தொகுதிகளில் பி.என்.பி. கட்சி அபார வெற்றி பெற்றதை அக்கட்சி தொண்டர்கள் கொண்டாடி வருகின்றனர்.

தாரிக் ரஹ்மான் முன்னாள் பிரதமர் கலிதா ஜியாவின் மகன் என்பது குறிப்பிடத்தக்கது.

**கூட்டணி கட்சிகளுக்கு தொகுதிகள் ஒதுக்கீடு:**

# அதிமுக முதல் வேட்பாளர் பட்டியல்: ஜெயலலிதா பிறந்தநாளில் அதிரடி காட்ட எடப்பாடி பழனிசாமி திட்டம்!

சென்னை, பிப். 13–

தமிழகத்தில் வரும் ஏப்ரல் மாதம் 17–வது சட்டசபை தேர்தல் நடைபெற இருக்கிறது. தேர்தலுக்கான தேதி மார்ச் மாதம் தொடக்கத்தில் அறிவிக்கப்பட உள்ளது. இந்த நிலையில், பிரதான எதிர்கட்சியான அதிமுக கூட்டணியை இறுதி செய்யும் பணியில் மும்முரமாக ஈடுபட்டுள்ளது.

அ.தி.மு.க. கூட்டணியில் பாஜக, பாமக (டாக்டர் அன்புமணி அணி), தமாகா, இந்திய ஜனநாயக கட்சி, புதிய நீதிக்கட்சி, புரட்சி பாரதம், பெருந்தலைவர் மக்கள் கட்சி, தமிழக



மக்கள் முன்னேற்றக் கழகம் உள்ளிட்டவை இடம்பெற்றுள்ளன. தேமுதிக, புதிய தமிழகம் ஆகிய கட்சிகளுடன் பாஜக தலைவர்கள் கூட்டணி பேச்சு வார்த்தை நடத்தி வருகின்றனர்.

**அதிரடி காட்டும் எடப்பாடி பழனிசாமி**

இந்த நிலையில், வரும் 24–ந் தேதி மறைந்த முன்னாள் முதல்–அமைச்சரும், அதிமுக பொதுச் செயலாளருமான ஜெயலலிதாவின் 78–வது பிறந்த நாள் வருகிறது. அதற்கு முன்னதாக, கூட்டணியை இறுதி செய்து, தொகுதி பங்கீட்டையும் முடித்து, எந்தெந்த கட்சிகளுக்கு எந்தெந்த தொகுதிகள்? என்பதை அடையாளம் கண்டுவிடவும் அதிமுக தலைமை திட்டமிட்டுள்ளது.

அதனைத் தொடர்ந்து, ஜெயலலிதா பிறந்த நாள் அன்று பாஜக, பாமக உள்ளிட்ட கூட்டணி கட்சிகளுக்கு ஒதுக்கப்பட்ட தொகுதிகள் பட்டியலையும், அதிமுக வேட்பாளர்களின் முதல் பட்டியலையும் வெளியிட்டு அதிரடி காட்ட கட்சியின் பொதுச் செயலாளர் எடப்பாடி பழனிசாமி திட்டமிட்டுள்ளார்.

15 தொகுதிகளுக்கான அதிமுக வேட்பாளர்கள்

ஏற்கனவே, அதிமுகவின் தேர்தல் அறிக்கை 2 கட்டங்களாக வெளியிடப்பட்டுள்ளன. அதில், "மகளிர் உரிமைத்தொகை ரூ.2 ஆயிரமாக உயர்த்தப்படும். ஆண்களுக்கும் அரசு பஸ்களில் இலவச பயணம். ஆண்டுக்கு 3 கியாஸ் சிலிண்டர்கள் இலவசம்" என்பது உள்பட 10 அறிவிப்புகள் இடம் பெற்றிருந்தன. இந்த நிலையில், ஜெயலலிதா பிறந்த நாள் அன்று 15 தொகுதிகளுக்கான அதிமுக வேட்பாளர் முதல் பட்டியலும் வெளியிடப்பட இருப்பதாக கூறப்படுகிறது. இதில், கட்சியின் பொதுச் செயலாளர் எடப்பாடி பழனிசாமி, முன்னாள் அமைச்சர்களின் பெயர்கள் இடம் பெற்றிருக்கும் என தெரிகிறது.

**4 முனைப்போட்டி**

தமிழக தேர்தல் களத்தை பொறுத்தவரை 4 முனைப்போட்டி நிலவும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. இதில் தனித்து களம்காணும் சீமான் தலைமையிலான நாம் தமிழர் கட்சி வரும் 21–ந் தேதி திருச்சியில் நடைபெறும் மக்கள் மாநாட்டில் 234 தொகுதிகளுக்கான வேட்பாளர்களை ஒரே மேடையில் அறிமுகப்படுத்த உள்ளதாக தெரிவித்துள்ளது.

நாம் தமிழர் கட்சிக்கு அடுத்தப்படியாக தேர்தல் களத்தில் வேகம் காட்டுவது அதிமுக தான். ஆளுங்கட்சியான திமுக இன்னும் கூட்டணியை இறுதி செய்யாமல் இருப்பதுடன் தேர்தல் அறிக்கை தயாரிப்பு பணியிலும் ஈடுபட்டு வருகிறது.

**அதிமுக தீவிரம்**

ஆனால், அதிமுகவோ தேர்தல் அறிக்கையில் முக்கியமாக இடம்பெறும் 10 அறிவிப்புகளை வெளியிட்டதுடன், முதற்கட்ட வேட்பாளர் பட்டியலை வெளியிடுவதிலும் தீவிரம் காட்டி வருகிறது. வரும் சட்டசபை தேர்தலில் அதிமுக கூட்டணியில் அதிமுக 170, பாஜக 25, பாமக 23, தமாகா 6, ஏனைய சிறிய கட்சிகள் 1 முதல் 2 தொகுதிகளில் போட்டியிடும் என தெரிகிறது.

# ரூ.4 ஆயிரம் கோடி மதிப்பிலான பிணையப் பத்திரங்கள் ஏலம் - தமிழக அரசு அறிவிப்பு!





சென்னை, பிப். 13–

ரூ.4 ஆயிரம் கோடி மதிப்பிலான பிணையப் பத்திரங்கள் ஏலத்தின் மூலம் விற்பனை செய்ய இருப்பதாக தமிழக அரசு அறிவித்துள்ளது. இதுதொடர்பாக அரசின் நிதித்துறை கூடுதல் தலைமைச் செயலாளர் வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பில் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது:–

தமிழ்நாடு அரசு மொத்தம் ரூ.4,000 கோடி மதிப்பில் 6 ஆண்டுகால பிணையப் பத்திரங்கள் ரூ.1,000 கோடி, தமிழ்நாடு அரசின் 7.31 சதவீத பிணையப் பத்திரங்கள் 2033 மறுவெளியீடு ரூ.1,000 கோடி, 7.54 சதவீத பிணையப் பத்திரங்கள் 2036 மறுவெளியீடு ரூ.1,000 கோடி, 7.61 சதவீத பிணையப் பத்திரங்கள் 2056 மறுவெளியீடு ரூ.1,000 கோடி ஏலத்தின் மூலம் விற்பனை செய்யவிருப்பதாக அறிவித்துள்ளது.

# ஈஷா யோகா மையத்தில் மகாசிவராத்திரி விழா: ராஜ்நாத் சிங் பங்கேற்கிறார்!



கோவை, பிப். 13–

தென் கைலாய பக்தி பேரவையின் தன்னார்வலர் ரவிந்திரன் கோவையில் நிருபர்களுக்கு அளித்த பேட்டியில் கூறியதாவது:–

ஈஷாவில் 23–வது மகாசிவராத்திரி கொண்டாட்டம் நாளை மறுநாள் (ஞாயிற்றுக்கிழமை) நடை பெற உள்ளது. இதில் சிறப்பு அழைப்பாளர்களாக பாதுகாப்புத்துறை மந்திரி ராஜ்நாத் சிங் உள்பட பல முக்கிய பிரமுகர்கள் மற்றும் லட்சக்கணக்கான பொதுமக்கள் கலந்து கொள்ள உள்ளனர். ஆதியோகி சிலை முன்பு மாலை 6 மணிக்கு தொடங்கி மறுநாள் காலை 6 மணி வரை சிவராத்திரி விழா கொண்டாடப்பட உள்ளது. சற்குரு ஜக்கிவாசுதேவுடன் நடைபெறும் விழாவில் சக்திவாய்ந்த தியானங்கள் மற்றும் இசை நிகழ்ச்சிகள் நடைபெற உள்ளன. இந்த ஆண்டு முதல்முறையாக சத்குரு ஜக்கிவாசுதேவ், ஆதியோகி சிலை முன்பு இருக்கும் யோகேஷ்வர லிங்கத்திற்கு மகா அபிஷேகம் செய்கிறார். இவ்வாறு அவர் கூறினார்.

# அகமதாபாத் விமான விபத்து விமானியின் திட்டமிட்ட செயலா? மத்திய அரசு விளக்கம்!



சென்னை, பிப். 13–

அகமதாபாத் விமான விபத்து ஒரு தொழில்நுட்பக் கோளாறு அல்ல, மாறாக விமானியின் திட்டமிட்டச் செயல் என்று இத்தாலிய நாளிதழான 'கொரியர் டெல்லா செரா' அண்மையில் வெளியிட்ட செய்தி அறிக்கை பரபரப்பை ஏற்படுத்தி வருகிறது. அந்த அறிக்கையில், "விமானம் புறப்பட்ட 32 வினாடிகளிலேயே அதன் எரிபொருள் சுவிட்சுகள் கையால் அணைக்க ப்பட்டுள்ளன. இதனால் என்ஜின்கள் இயங்காமல் போயுள்ளன. இது ஒரு தற்செயலான தவறு அல்ல, திட்டமிட்டு செய்யப்பட்ட செயல்.

வாஷிங்டனில் ஆய்வு செய்யப்பட்ட விமானத்தின் காக்பிட் குரல் பதிவு தரவுகள் மூலம், விமானத்தின் தலைமை விமானி கேப்டன் சுமித் சபர்வாலே என்ஜின்களை அணைத்ததாக தெரியவந்துள்ளது. அவர் மன அழுத்தத்தில் இருந்தது விபத்து நடந்து ஒரு மாதத்தின் பின் தெரிய வந்தது. போயிங் 787 ட்ரீம்லைனர் ரக விமானத்தின் இரண்டு என்ஜின்களும் ஒரே நேரத்தில் இயந்திரக் கோளாறு காரணமாகச் செயலிழக்க வாய்ப்பில்லை என்று நிபு ணர்கள் உறுதிப்படுத்தியு ள்ளனர்" என்று கூறப்பட்டுள்ளது.

இந்நிலையில் அகமதாபாத் ஏர் இந்தியா விமான விபத்து குறித்த விசாரணை இன்னும் முடிவடையவில்லை என்றும், இது தொடர்பாக ஊடகங்களில் வெளியாகும் செய்திகள் ஊகங்களே என்றும் மத்திய விமான போக்குவரத்துக்கு துறையின் கீழ் இயங்கும் விமான விபத்து புலனாய்வு அமைப்பு (AAIB) விளக்கமளித்துள்ளது.

புலனாய்வு இன்னும் நடைபெற்று வருகிறது. இறுதி முடிவுகள் எதுவும் இன்னும் எட்டப்படவில்லை என்று AAIB தனது அறிக்கையில் தெரிவித்துள்ளது.

தேவை

தமிழகத்தில் இயங்கி வரும் பிரபல தமிழ் மற்றும் ஆங்கில நாளிதழுக்கு, தமிழகம் முழுவதும் துடிப்பும், ஆர்வமும் மிக்க இளைஞர்கள் செய்திகள் சேகரிக்க மற்றும் புகைப்படம் எடுக்க தேவை.

தொடர்புக்கு:
செல் : 7904806432
போன்: 0452 – 4916699

Printed by Dr.P.Pandiarajan, Printed at Raja Printers at No.5, Namashivayam Nagar 2nd St, Duraisamy Nagar, Madurai -625 016. Published by Dr.P.Pandiarajan, at No.5, Namashivayam Nagar 2nd St, Duraisamy Nagar, Madurai -625 016. Editor: Dr.P.Pandiarajan. TN/WPP-143/SR/2018-2020